தென்மொழி

இன்றுள்ள நிலையில்
எவ்வகைத் தொண்டும் பயனளிக்காது!

செய்தியிதழ் நடத்துகின்ற திருகுதா ளக்காரர்
    செந்தமிழைத் தீய்க்கும் மட்டும்—
பொய்தெறிக்கப் பேசுகின்ற அரசியல் எத்தர்களின்
    புரட்டுகள் ஒழியும் மட்டும்—
எய்திவரும் பொதுமைநலன் சீர்திருத்த மேம்பாடும்
    இற்றிற்று வீழ்வ தல்லால்,
உய்தியில்லை செந்தமிழ்க்கே! உருவாகும் தமிழர் நலம்
    உருப்படப் போவ தில்லையே!

சோற்றுக்கும் காசுக்கும் சொல்மாறி அறிஞர்குழாம்
    சொந்தநலன் பேணும் வரைக்கும்—
கூற்றுக்கும் கொடியவராய்த் தலைவர்களின் கோமாளிக்
    கொடுவினைகள் தீரும் வரைக்கும்—
ஆற்றிவரும் தமிழ்த்தொண்டில் ஆகிவரும் சிறப்பியல்கள்
    அற்றற்று வீழ்வ தல்லால்,
மாற்றமில்லை தமிழ்நாட்டில்! மதிப்பில்லை செந்தமிழ்க்கு;
    மக்கள் நலம் சேர்வ தில்லையே!

சுவடி 16
ஓலை : 6

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
ஓர் உரூபா.

நமக்கு வந்த மடல்கள்.

0:730: பெருந்தகையீர்! சால வணக்கம். 'தென்மொழி, இதழில் பல்வகையான பிழைகள் மலிந்துள்ளன. திருத்தமுடன் வெளிவரும் என எதிர்பார்த்தேன். மிகுகின்றனவே யொழியக் குறைவனவாகத் தெரியவில்லை. இத்தனை பிழையுடன் வெளிவருவதற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும், மா. பூங்குன்றனும் தேவையில்லையே? திங்களுக்கொரு முறை வெளியாகும் இதழைக் குறையில்லாமல் வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

புலவர், அ. நக்கீரன், சென்னை-50.

ஆசிரியர் குறிப்பு : தென்மொழியில் நேர்ந்திருக்கும் பல அச்சுப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் வேறு சிலவாகச் சிலவற்றையும் எடுத்துக் காட்டியிருந்தீர்கள். மகிழ்ச்சி—நன்றி.

நான் அவ்வப்பொழுது நிகழ்ச்சிகளின் பொருட்டாக வெளியூர் செல்கின்ற பொழுதும், வேறு சில வினையழுத்தங்களில் ஈடுபடுகின்ற பொழுதும் இன்னும் என் நேரடிப் பார்வையற்ற சில பொழுதுகளிலும் வேறு சிலர் மெய்ப்புகளைத் திருத்துவதாலும் ஒப்பிட்டுப் பார்ப்பதாலும் இக்குறைகள் நேர்கின்றன. இவற்றைப் பெரும்பாலும் தடுக்க முடியவில்லை.

மேலும், அரைப்படி ஒருபடி எடுத்துச் செல்லும் பாலைச் சிந்தாமல் கொண்டு போகலாம். ஒரு பால்பண்ணையில் புழங்குகையில் பல துளிகள் சிந்தவும் செய்யும்; சிதறவும் செய்யும். அந்நிலைகளை நானே கண்டு தவிர்க்க முடியாமல் வருந்தியிருக்கின்றேன். என் செய்வது? வினைக்கடுமை நோக்கிச் செப்ப நெகழ்ச்சியைப் பொறுக்க 'மாதம் ஒரு முறை வரும் இதழ்' என்று எழுதியிருந்தீர்கள். 'தென்மொழி' யின் உண்மையான வினைச்சுமையை நீங்கள் உணரவில்லை என்று கருதுகின்றேன். 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்றறிந்திருப்பீர்கள். (**தென்மொழி, தமிழ்ச்சிட்டு**-களை அச்சிட்டு வெளியிடுவதை மட்டுந்தானா என்னுடைய பணியாக நான் கொண்டிருக்கின்றேன்?)

இனி நீங்கள் சுட்டிய பல பிழைகள் பிழைகளாக இல்லை.

(எ-டு) இத்தனை, எத்தனை, அத்தனை என்னும் சுட்டு வினாச் சொற்களுக்குப் பின் புணர்ச்சி தவறாகாது.

வட சொற்களாக நீங்கள் சுட்டிய கவனம், கடினமான, ஆதரவு, தந்திரம், காரணம்—ஆகிய சொற்கள் அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களே. (நீலாம்பிகையார் கருத்து தவறு). பராமரித்தல் ஐய்மானது.

புள்ளி விழாதப், ர் முதலியவற்றைக் கூடப் பெரிதாகச் சுட்டியதும், குத்துதலைக் கொச்சையாகச் சுட்டியதும் இன்னும் சிலவும் தங்கள் சொல்லெளிமையையே காட்டும். வினைக்கடுமையை நீங்கள் உணர்ந்ததாக ஒருவரி எழுதக் கூடாதா? 'குணம் நாடிக் குற்றமும்

(அட்டைத் தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

தென்மொழி

சுவடி: 16 ஓலை: 6.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
நளி. தி. பி. உ௦௧௰-
சன-பிப்-1980.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்,
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்,
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

தீபம் பார்த்தசாரதிகள் தெளிவடையட்டும்!

கடந்த 15-1-80-ஆம் நாளைய 'துக்ளக்' இதழில், 'தேசிய மொழிகளும் தமிழ் நாடும்' என்னும் தலைப்பில், 'தீபம் நா. பார்த்தசாரதி ஒரு கட்டுரை எழுதியுள்ளார் அதில் எவ்வகைக் கரணியமும் இல்லாமலேயே தமிழ்நாட்டு அறிஞர்கள் மேல் ஒரு குற்றச்சாட்டைக் கூறியுள்ளார். தமிழறிஞர்களுக்குச் சமசுக்கிருதத்தின் மேல் அளவு கடந்த வெறுப்பு இருக்கின்றதென்றும், எவ்வளவுக்கெவ்வளவு அவ் வெறுப்பு மிகுந்திருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் அறிஞர்கள் என்று பாராட்டப் பெறுகிறார்கள் என்றும் அவர் அதில் குறைபட்டுக் கொள்கிறார். இக்குற்றச்சாட்டுடன் அவர் சமசுக்கிருத மொழியின் அருமை பெருமைகளை அக்கட்டுரையில் அளவிறந்து கூறி, அம்மொழியைத் தமிழர்கள் வெறுக்கக் கூடாது; தமிழோடு ஒப்பவைத்துப் பாராட்டிக் கொள்ளுதல் வேண்டும் என்று பொருள் படும்படி கூறியுள்ளார். அவர் வேண்டுகோள், ஒருவேளை தமிழ் வரலாறு தெரியாதவர்களுக்கும் ஆரியப் பார்ப்பனர்களின் மொழி

இன வரலாற்று அழிம்புகள் விளங்காதவர்களுக்கும் 'சரியானது அல்லது நயன்மையுடையது' போல் படலாம். ஆனால், கடந்தகால பிராமணீய மொழி, இனத் தாக்குதல்களை நன்கு உணர்ந்தவர்கள் பார்த்தசாரதியின் உரைகளை ஆரியப் பசப்பு மொழிகளில் ஒன்றாகவே கருதுவர்.

பொதுவாக, ஆரியப் பார்ப்பனர்கள் அஃதாவது பிராமணர்கள் தமிழ்மொழியை என்றுமே பாராட்டியதில்லை; பேணிக் கொள்வதுமில்லை. அதைச் **சூத்திர மொழி** என்றும், **நீச பாஷை** என்றுமே கூறி வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். மறைந்த நயன்மைக் கட்சித் தலைவர்களுள் ஒருவரும், மிகச் சிறந்த அரசியல் வரலாற்று அறிஞருமாகிய வயவர். **ஏ. டி. பன்னீர்ச்செல்வம்** அவர்கள் 'ஆரியப் பார்ப்பனர்கள் தேவையின் பொருட்டே தமிழைப் பயன் படுத்தினர்; அஃதாவது ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதைப் போல. மற்றபடி அவர்கள் சொந்த மொழியாகக் கருதுவது சமசுக் கிருதத்தையே! தமிழை விட சமசுக்கிருதமே மேல் என்பது அவர் களின் முடிந்த முடிபாகும்' என்று தெளிவாகக் கூறியுள்ளார். பொதுவாக இன நிலையில் ஆரியத்தையும், மொழி நிலையில் சமசுக் கிருதத்தையும், அது முடியாத பொழுது அதற்கு முற்றிலும் இலக் கண இலக்கிய வழியில் வயப்பட்ட இக்கால் உள்ள இந்தி மொழியை யுமே ஆரியப் பார்ப்பனர்களும் அவர்கள் வழி வடநாட்டினரும் தலைமைப்படுத்த வேண்டும் அல்லது அதிகாரம் கொண்டன வாக ஆக்க வேண்டும் என்று அங்காந்து திரிகின்றனர். இந்நிலையில் தமிழுக்கு இக்கால் ஏற்பட்டு வருகிற மேம்பாடுகளும், தமிழர்களிடையில் தோன்றி வளர்ந்து வருகின்ற விழிப்புணர்வுகளும் பார்த்தசாரதி போலும் படித்த—ஓரளவு பொதுமக்களிடையே விளம் பரம் பெற்ற - பார்ப்பன எழுத்தாளர்களுக்கு எரிச்சலையும் அதிர்ச்சி யையும் தருகின்றனவாக இருக்கலாம். அவ்வுணர்வு வெளிப் பாட்டின் ஒரு பகுதியாகவே 'துக்ளக்'கில் அவர் எழுதிய கட்டுரையை நாம் கருதுதல் வேண்டும்.

ஆரியப் பார்ப்பனர்களின் குணக்கேடுகளைப் பற்றி **ஆபர் துபாய்சு** என்னும் வரலாற்று மேலையறிஞர் தம் புகழ்மிக்க **'இந்துக்களின் ஒழுக்க வழக்கங்களும், வினைமுறைகளும்'** (Hindu Manners, customs and ceremonies), என்னும் வரலாற்று நூலில், 'அவர்கள் பேராசை (avarice) அதிகார வெறி (ambition), வஞ்சனை (cunning), நேர்மையின்மை (dishonest), இரட்டை நாக்கு (donble tongue), ஏய்த்தல் (Fraud), முறைகேடு (Injustice), நயவஞ்சகம் (Insurwating), கள்ளத் தொடர்பு (Intrigne), கொடுமை (Oppression), இழிதகைமை (Servile), சூது (Wile) போன்ற தீய பழக்கங்களுடையவர்கள்' என்கிறார். இத்தீக் குணங்களுள் முழுமையுமோ ஒன்றிரண்டோ இன்றுள்ள ஆரியப் பார்ப்பனர்களிடமும் காணப்படக் கூடியவையாகவே

உள்ளன. எனவே, தமிழ்மொழியின் உண்மையான சிறப்பையும். அல்லது தமிழின மேம்பாட்டையும் எவ்வகையிலும் அவர்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். அதனுல் நாமும் பார்த்தசாரதி போலும் தமிழ்ப் படித்த பார்ப்பனர்களின் கருத்துகளையும் கவனிக்கவேண்டுவ தில்லை. இனி, அவர்கள் வழி, சமசுக்கிருதத்தையும் அதன் மேலாளுமையுமே சிறப்பென்று கொண்ட வையாபுரி, மீனுட்சிசுந்தர, கண்ணதாச அடியார்களையே அவர்கள் தமிழறிஞர்கள் என்று இது வரை ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழுக்கு உண்மை ஏற்றம் கண்ட மெய்யான தமிழறிஞர்களைப்பற்றி அவர்கள் எப்பொழுதுமே காழ்ப்புக் கொண்டவர்களாகவும், எரிச்சலுற்று மறைமுகத் தாக்குதலை நடத்து பவர்களாகவும், இன்னும் முடிந்தால் அப்படிப்பட்டவர்களையே திட்ட மிட்டு அழித்தொழிப்பவர்களாகவுமே இன்றுவரை இருந்து வரு கின்றனர்.

இனி, பார்த்தசாரதி, தம் கட்டுரையில் சமசுக்கிருதத்தைப் பற்றி வரம்பின்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார். சமசுக்கிருதம் ஓர் அரைச் செயற்கைக் கலவை மொழி என்பதையும், ஏறத்தாழ கி. மு. 5-ஆம் நூற்றுண்டளவில் தோற்றுவிக்கப் பெற்ற மொழி என்பதையும், வேதகால ஆரியர் பேசி வந்த ஆரிய மொழி அழிந்து போன பின் பிராகிருதம் (வட திரவிடம), பாலி மொழிகளினின்று தோற்று விக்கப் பெற்றதென்பதையும் மறைமலையடிகள், பாவாணர் போலும் மொழி வரலாற்றறிஞர்கள் நன்கு ஆய்ந்து புலப்படுத்தியுள்ளனர். இனி, பாவாணரவர்கள் சமசுக்கிருதத்தில் ஐந்தில் இரு பகுதி முழுத் தமிழ்ச் சொற்களும் ஐந்தில் இரு பகுதி தமிழ் வேரினின்று திரிந்த சொற்களும், ஐந்தில் ஒரு பகுதி இடுகுறிச் சொற்களென்றும் தம் நுண்மாண் நுழைபுல வன்மையால் முற்ற ஆய்ந்து முடிவுகட்டி யுரைப்பார். சமசுக்கிருத அகர வரிசையில் உள்ள நால்வகை ஒலிப்பு களும் பிராகிருத மொழியில் இருந்தவையே. இக்கால் பேசப் பெறும் மணிப்பிரவாளத் தமிழில் தமிழுடன் பிராகிருதமொழிச் சொற்களே மிகுதி. சமசுக்கிருதம் பிராகிருதம் கலந்து செய்யப்பட்டதால் அவை சமசுக்கிருதச் சொற்கள் போலவே தோன்றுகின்றன.

சமசுக்கிருதம் ஒருபோதும் பேசப்பட்டதில்லை. அந்த இழுக் கைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆரியர்கள் அதால் தம் வேத மதக் கொள்கைகளை மக்கள் இழிவாகப் புறக்கணித்து விடுவார்கள் என்பதற்காக, அஃது இங்குள்ளவர்களால் அன்று, தேவர்களால் பேசப் பெறுவது என்று அதற்கு உயர்வு கூறினர். மொட்டையனைக் **கேசவன்** என்றும், பெட்டையனைப் **புருசோத்தமன்** என்றும், மூங்கையனை **வாகீசன்** என்றும், குருடனைக் **கண்ணுயிரம்** என்றும் அழைப்பது போல், இந்நிலவுலகத்து எப்பொழுதும் எங்கும் எவராலும் பேசப் பெருத மொழியைத்தேவருலகத்துப் பேசப் பெறுகிற மொழி என்னும் பொருளில் **தேவ பாஷை** என்று பெருமைப் படுத்திப் பேசினர். **பிரம்மசிரி மருவூர் கணேச சாத்திரியார்**

என்பவர் எழுதியுள்ள **'வேத மதம்** அல்லது **வேதாகம இதிகாஸ புராண** ரகஸ்ய **நிருபணம்'** என்னும் நூலில் (பக்கம் 194-195) கீழ்வருமாறு எழுதுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

''சிலர் நமது முன்னோர் குடும்பங்களில் ஸம்ஸ்கிருத பாஷை தேச பாஷையாக பூர்வகாலத்தில் வழங்கி வந்ததெனவும், அந்த பாஷை இப்போது செத்த பாஷையாய்ப் போய் விட்டது எனவும் தற்காலம் சொல்லுகின்றனர். **இவ்வுலகில் ஸம்ஸ்கிருத பாஷை ஒரு ஸமயமும் தேச பாஷையாக வழங்கப்பட்டதில்லை.** கற்றோர்கள் கூட்டங்களில் மாத்திரம் வழங்கப்பட்டதேயன்றி வேறு எவ்விதமுமல்ல. இவ்வுண்மை தெரியாமல் தாறுமாறாய் வசனிக்கும் விஷயங்கள் தற்காலம் விசேஷமாயிருக்கின்றமையால், ஏதோ அவ் விஷயத்தையும் இங்கு நாம் குறிக்க வேண்டியதாயிற்று. ஸம்ஸ்கிருத பாஷை புண்ணிய புவனங்களாகிய ஸுவர்லோகம், மஹர்லோகம், கைலாசம்-முதலிய இடங்களில் வழங்கும் பாஷையேயன்றிப் பூலோக தேச பாஷையல்ல. தென்தேசத்திலிருந்த நம்முடைய முன்னோர்கள் எப்போதும் **தென்மொழி**யையே பேசும் பாஷையாக வழங்கி வந்தனரே யன்றி வேறு எந்த பாஷையும் பேசியவர்களல்லர். ஆனது பற்றியே மகாபாரதத்தில் அர்ஜுனனது தீர்த்தயாத்ரா ப்ரகரணத்தில் **'மணலூர்புரே'** எனும் சொல்லிலும் ஸ்கந்த புராணத்தில் **'பெண்ணுநல்லூர்'** எனும் சொல்லிலும் தமிழ் வார்த்தைகளை உபயோகப்படுத்தி யிருப்பதனாலும், இவ்வாறே மற்று சிவரஹஸ்யாதி நூல்களிலும் நகர, கிராம ஜனங்களின் பெயர்களை வழங்கும் ஸந்தர்ப்பங்களில் **தென்மொழி**யே பல இடங்களில் வழங்கப்பட்டிருப்பதினாலும் தென் தேசத்தில் தமிழ்மொழியே தேச பாஷையாக வழங்கி வந்ததென வெளிப்படையாகத் தெரிகின்றது. இவ்வுலகில் இவ்வாறு தேச பாஷைகள் வழங்குவது போல், தேவ உலகில் வழங்கும் பாஷை ஸம்ஸ்கிருதமே ''

எனவே, அவர்கள் கூற்றுப்படியே சமசுக்கிருதம் தேவருலகத்தில் வழங்கி வரும் மொழியாக இருக்கிறதென்றால், இங்கு, இந்தத் தமிழ்நாட்டில், அல்லது இந்தியாவில்தான் அதற்கென்ன வேலை? இதற்குப் போய் ஏன் தீபம் பார்த்தசாரதியார் அலட்டிக் கொள்கிறார். அவ்வாறு அலட்டிக் கொள்வது அவர் அறிவன்று; அவர்போட்டிருக்கும் பூணூல். தமிழ் பேசும் ஒரு பெரிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு கூட்டத்தினரைச் சூத்திரர் என்றும், தங்களைப் பிராமணர்கள் என்றும் அறிவியல் வளர்ந்து வரும் இந்த நாளிலும் கூறிப் பெருமை பேசும் வெட்கங்கெட்ட இனம் சார்ந்த பார்த்தசாரதியா, சமசுக்கிருதத்தை வெறுப்பவர்களே தமிழறிஞர்களாக இத்தமிழ்நாட்டில் மதிக்கப் பெறுகின்றனர் என்று வயிறெரிந்து சாவது? உண்மை அதுவன்று. அற்றைநாள் தமிழறிஞர்கள் சமசுக்கிருதத்தைத் தேவ மொழி என்று கைகட்டி வாய் பொத்தி வணங்கி வாழ்த்துப் பாடினர். அவர் வழி வையாபுரி, தெ. பொ. மீக்கள் தோன்றினர்.

இன்றுள்ள நிலை வேறு, தேவமொழியை மட்டுமன்று, தெய்வத்தையே ஆராயும் அறிவியல் காலம் இது. சமசுக்கிருதத்தின் உண்மை வரலாறு இங்குள்ள அனைவர்க்கும் தெளிவாகத் தெரிகின்ற காலம் இது இந்நிலையில் அதற்குள்ள இயல்பான வரலாற்று நிலைக்கு மேல் தெய்விகத்தனம் கற்பித்துப் பேச, தமிழர்கள் இன்னும் குடுமி வைத்தவர்கள் அல்லர். இன்னும் சொன்னால் தமிழ். சமசுக்கிருதத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் விளக்கம் தேவையானால் கேளுங்கள்; தெரிவிக்கிறோம். மற்றபடி எழுதுவதற்குத் **துக்ளக்** போலும் இதழ்களும், அவற்றைப் பொதுமக்களிடம் பரவலாக விளம்பரப்படுத்த செல்வக் கொழுப்புடையவர்கள் பணமும், அதிகாரக் கொழுப்புள்ளவர்களின் ஆட்சியும் உள்ளதென்று தமிழ் மொழியையும் தமிழ் அறிஞர்களையும் தாழ்த்திப் பேச வேண்டா.

திரவிடமொழிக் குடும்பத்தை வடமொழிச் சார்பற்றவை என்று முதன் முதலிற் கண்டு காட்டியவர் **கால்டுவெல்** ஆவர். அவர்க்குப் பின் தமிழியல் வரலாறு மிகவும் தெளிவுபடுத்தப் பெற்று விட்டது. இதற்கு மேலும் தமிழ் சமசுக்கிருதத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்க முடியாது. அவ்வாறு கிடக்க சமசுக்கிருதம் தமிழைவிட மேம்பட்ட மொழியுமன்று. சமசுக்கிருத இலக்கணத்தின் தன்மை மிகமிகக் காட்டுவிலங்காண்டித்தனமானது. ஓரிரண்டு எடுத்துக் காட்டுகளிலேயே இதை மெய்ப்பிக்கலாம். சமசுக்கிருத பாலியற் பாகுபாடு என்னும் இலக்கணக் கூறு ஒன்றில் உள்ள செயற்கைத் தன்மையைக் கீழ்வரும் சொற்களில் காணலாம்.

சமசுக்கிருதத்தில் அஃறிணைப் பொருளாகிய ‘கல்’ என்று பொருள்படும் **‘பாஷாணம்’** ஆண்பால். அதே கல்லைக் குறிக்கும் **சிலா** என்னும் சொல் பெண்பால். இன்னும் ‘மனைவி’ என்று பொருள் படும் மூன்று சமசுக்கிருதச் சொற்களில் தார—ஆண்பால்; **பார்ய**—பெண்பால்; **களஸ்திர** -அலிப்பால். அதே போல் பொத்தகம்’ என்று பொருள்படும் மூன்று சொற்களில் **கிரந்த**—ஆண்பால்; **ச்ருதி** -பெண்பால்; **புஸ்தக**—அலிப்பால். **தத்கச்சதி** என்னும் ஒரே படர்க்கை வினைமுற்று இடத்தைப் பொறுத்து அவன் போகிறான், அவள் போகிறாள், அது போகிறது என்று மூன்று வகையாகவும் பொருள்படும். இத்தகைய திணை, பால், எண், இடம் தெளிவாக இல்லாத சமசுக்கிருதம் எப்படித் தேவமொழியாகும்? மேலும் தூய தனித்தமிழ்ச் சொற்களை ஒலி மாற்றியும், திரித்தும், கடைக்குறைத்தும் சமசுக்கிருதம் என்று கூறி வந்த பொய் பித்தலாட்டத்தைத் தமிழர்கள் இன்னும் கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருக்க முடியாது. ஆயிரக்கணக்கான சொற்களை இதுபோல் காட்டலாம். எடுத்துக்காட்டுக்குச் சில சொற்கள் : (இவை பாவாணரின் ஆராய்ச்சி வெளிப்பாடுகள்.)

தமிழ்	**வ. சொல்.**	**தமிழ்**	**வ. சொல்.**
அக்கை	அக்கா	படி	ப்ரதி

அம்பலம்	அம்பரம்	நிலையம்	நிலய
அரசன்	ராஜன்	பாதம்	பாத
இடைகழி	தேஹலி	பல்லி	பல்லீ
உருவம்	ரூப	பலகை	பலக
உலகு	லோக	பிண்டம்	பிண்ட
உவமை	உபமா	புடவி	ப்ருத்வி
கரணம்	கரண	புழுதி	பூதி
கருமம்	கர்ம	புருவம்	ப்ருவ
கலுழன்	கருட	பொத்தகம்	புஸ்தகம்
கன்னி	கன்யா	மண்டபம்	மண்டப
காக்கை	காக்க	மயிர்	ச்மச்ரு
காளி	காலீ	மயில்	மயூர
குண்டம்	குண்ட	மாத்திரை	மாத்திர
கும்பம்	கும்ப	முத்தம்	முக்த
கோபுரம்	கோபுர	மெது	ம்ருது
சவம்	சவ	வட்டம்	வ்ருத்த
சவை	சபா	சாயை	சாயா
சுக்கு	சுஷ்க	கடிகை	கடிக
திரு	ஸ்ரீ	கலாவம்	கலாப
தூதன்	தூத	சகடம்	சகட
தோணி	த்ரோணி	சடம்	ஜடம்

மேலும், சமசுக்கிருதத்திற்கு முன்னர் வேத ஆரியர் பேசி வந்த வேதமொழியிலேயே தமிழ்மொழிக் கூறுகள் மிக்கிருந்தன என்று பல சான்றுகளுடன் நிலைநாட்டுவர் கேம்பிரிட்சு வடமொழிப் பேராசிரியராகிய **இராப்சன் (Rapson)** என்னும் அறிஞர்.

இன்னும் தமிழ்மொழி சீரிழந்து போனதற்கும், தமிழினம் சீரழிந்து போனதற்கும் சமசுக்கிருதமும் ஆரியப் பார்ப்பனருமே தலையாய கரணியமும் கரணியரும் ஆவர். சமசுக்கிருதத்தை வேண்டுமென்றே ஆள் பெயர், ஊர்ப் பெயர், நாட்டுப் பெயர், கோவில் பெயர் அனைத்திலும் புகுத்தியவர்கள் சமசுக்கிருத வெறியர்களே. பார்த்தசாரதி கூறுவதுபோல் தமிழில் இன்னும் வெறியர்கள் தோன்றவில்லை. தமிழ் வெறியர்கள் ஒரு பத்துப் பெயராகிலும் இருப்பாரேயாகில், உண்மைத் தமிழகத்தில் பார்த்தசாரதியும் இரார்; 'துக்ளக்'கும் இருக்காது. ஒருவேளை இருந்தாலும் பார்த்தசாரதி மார்பில் பூணூலும், 'துக்ளக்' இதழில் பெயருடன் கலப்புத் தமிழும் இல்லாமலிருந்திருக்கும். நிலை அவ்வாறில்லாமல் இருப்பது ஒன்றே, பார்த்தசாரதி கூறும் தமிழ் வெறியர்கள் யாரும் இங்கு இல்லை என்பதை உணர்த்தும்.

பார்த்தசாரதி கூட்டத்தினரின் சமசுக்கிருத வெறி இத்தமிழகத்தில் எப்படிச் செயற்பட்டது என்பதற்கான சான்றுகள் :

மாற்றப்பட்ட ஆட்பெயர்கள் :

வடமொழிப் பெயர்	பொருள்
கேசவன்	மயிரான்
பூவராகன்	நிலப்பன்றி
கும்பகர்ணன்	குடக்காதன்
மண்டோதரி	பானைவயிறி
சூர்ப்பநகா	முறம்பல்லி
காமாட்சி	காமக்கண்ணி
மீனாட்சி	கயற்கண்ணி
ஸ்வர்ணாம்பாள்	பொன்னம்மை

மாற்றப்பட்ட ஊர்ப் பெயர்கள் :

தமிழ்ப் பெயர்	வடமொழிப் பெயர்
இடைமருதூர்	மத்தியார்ச்சுனம்
கழுகுக்குன்றம்	பட்சிதீர்த்தம்
சிற்றம்பலம்	சிதம்பரம்
திருவரங்கம்	ஸ்ரீரங்கம்
திருவானைக்கா	ஜம்புகேசுவரம்
நாவலந்தீவம்	ஜம்புத்வீபம்
பழமலை (முதுகுன்றம்)	விருத்தாசலம்
பாதிரிபுரம்	பாடலிபுரம்
புக்கொளியூர்	அவிநாசி
மயிலாடுதுறை	மாயூரம்
மரைக்காடு	(மறைக்காடு) வேதாரண்யம்
வினைதீர்த்தான்கோயில், புள்ளிருக்குவேலூர்	வைத்தீசுவரன்கோயில்
வெண்காடு	சுவேதவனம்

மாற்றப்பட்ட கடவுள் பெயர்கள் :

தமிழ்	வ. மொழி	தமிழ்	வ. மொழி
பொன்னன்	ஹிரண்யன்	தூக்கிய திருவடி	குஞ்சிதபாதம்
அரவணையன்	சேஷசாயி	தென்முகநம்பி	தக்ஷிணாமூர்த்தி
அடியார்க்கு நல்லான்	பக்தவத்சலம்	மங்கைபாகன்	அர்த்த நாரீசுவரன்
அம்மையப்பன்	சாம்பமூர்த்தி	உலகநம்பி	ஜகநாதன்
உலகுடையான்	ஜகதீச்வரன்	செம்மலையான்	அருணாசலம்
சொக்கன்	சுந்தரன்	பிறைசூடி	சந்திரசேகரன்
தாயுமானவன்	மாத்ருபூதம்	மாலிடங் கொண்டான்	சங்கர நாராயணன்
கருமாரி	கிருஷ்ணமாரி	முருகன்	சுப்பிரமணியன்
ஆடலரசன்	நடராஜன்	பிள்ளையார்	கணபதி

—இவ்வாறு தூய தமிழைக் கெடுத்து இழிவு தோன்றுமாறும்

அதை விளங்கிக் கொள்ளாதவாறும் செய்த ஆரியப் பார்ப்பனர்கள் மொழி வெறியர்களா, இத்தீமையை ஏற்றுக்கொள்வதனுல் எதிர் வரும் தாழ்ச்சிகளையும் அழிவுகளையும் அறியாத கள்ளங் கவடற்ற வர்களானவர்களும், அன்பினுலும் விருந்தோம்பலினுலும் பகைவர்களை யும் அரவணைத்து ஆதரித்துப் போற்றி, இன்று அவலத்திற் காட்பட் டுக் கிடப்பவர்களும் ஆன தமிழர்கள் மொழி வெறியர்களா? இதற்குப் பார்த்தசாரதியார் **'துக்ளக்'**கிலேயே விடை தருவோரா? அல்லது **தென்மொழிக்**கே எழுதித் தம் பெருந்தன்மையை உணர்த்துவாரா?

இன்னென்றை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் நன்று. மக்களினத்தில் மட்டும் ஆரியப் பார்ப்பனர்கள் சாதி யிழிவுகளைப் புகுத்தவில்லை. தமிழ் எழுத்துகளிலும் சாதிப் பாகுபாட்டைப் புகுத்தி யிருப்பதைப் பார்த்தசாரதியார் அறிந்திருப்பார். ஏனெனில் அவர் தமிழாசிரியராக இருந்தவர். **பாட்டியலில்** உள்ள எழுத்துச் சாதிப் பாகுபாடுகள் இவை :

உயிரெழுத்துகளும், முதல் ஆறு மெய்யெழுத்துகளும் } பார்ப்பன எழுத்துகள்.
இரண்டாவது ஆறு மெய்யெழுத்துகள்—சத்திரிய எழுத்துகள்.
ல், வ், ழ், ள் — வைசிய எழுத்துகள்.
ற், ன் — சூத்திர எழுத்துகள்.

இன்னும், அதில் குறிப்பிட்டுள்ள பாட்டு நிலைகள் வருமாறு :

பார்ப்பனர்க்கு—வெண்பா. வைசியர்க்கு—கலிப்பா.
சத்திரியர்க்கு —ஆசிரியப்பா. சூத்திரர்க்கு வஞ்சிப்பா.

கலம்பகத்தில், தேவர்க்கு 100 செய்யுள், பிராமணர்க்கு 95, அரசர், அமைச்சர்க்கு 70 வணிகர்க்கு 50 செய்யுள், சூத்திரர்க்கு 30 செய் யுள் பாட வேண்டும் என்பது பாட்டியல்.

இப்படி எழுத்து, சொல், பாட்டு, மக்கள், ஊர், பேர், கடவுள் எல்லாமும் பார்ப்பனர்க்கு அடிமையாக இருந்தால் பார்த்தசாரதியார் மெச்சி, உச்சி குளிர்வாரோ? (நல்லவேளை அவர் உச்சிக்குடுமி எதுவும் வைத்திருக்கவில்லை; பரட்டைத்தலையராக இருக்கிறுர்) இல்லாவிட்டால், அல்லது தட்டிக் கேட்டால், அல்லது ஆரியப் பார்ப் பனர்க்குத் தமிழர் அடிமைகள் ஆக முடியாது என்றுல், அல்லது சமசுக்கிருதத்திற்குத் தமிழ்மொழி தாழ்ந்ததன்று, உயர்ந்ததே என்றுல் உடனே 'லோகம் கெட்டுப் போயிடுத்து' என்று கூத் தாடும் சவண்டிப் பார்ப்பனர் போல, பார்த்தசாரதியாரும் தமிழ் நாட்டு அறிஞர்களுக்குச் சமசுக்கிருதத்தின் மேல் காரணமற்ற வெறுப்பு, துவேஷம் என்று 'துக்ளக்'கில் இல்லையென்றுல் தினமணிக் கதிரில் எழுதோ எழுதென்று எழுதுவார். இல்லையா, தீபம் பார்த்தசாரதி அவர்களே!

இன்னென்றைப் பார்த்தசாரதியார் தம் கட்டுரையில் கூறி யிருக்கிறுர். அதுதான் சமசுக்கிருதம் கழகக் காலத்திலும் அதை யடுத்த காலங்களிலும் ஓர் அறிவுத் தொடர்பை **(Intellectual**

companianship) தொடர்ந்து அளித்து வந்திருக்கிறதாம். நல்ல வேடிக்கை இது. தமிழ்மொழியில் இருந்த நூற்றுக்கணக்கான அறிவு நூல்களைச் சமசுக்கிருதத்தில் பெயர்த்து எழுதிக் கொண்டு, தமிழ் மூலங்களை அழித்து விடுதல் பார்ப்பனர்கள் அன்றிலிருந்து இன்றுவரைத் தொடர்ந்து செய்து வரும் ஓர் அப்பட்டமான அழிம்பு வேலை. இது பற்றித் தென்மொழியில் முன்பே பல செய்திகளையும் குறித்திருக்கிறோம். இப்பொழுது தஞ்சை சரசுவதி மகாலில் தொடர்ந்து இவ்வேலை நடந்து வருவதையும் சுட்டியிருக்கிறோம். வேதத் தொடரின் இறுதியில் சேர்க்கப் பெற்றிருக்கும் உபநிடதங்கள் யாவும் தமிழ் முனிவர்கள் எழுதியவை என்பதை மறைமலையடிகள் உறுதிப்படுத்தியுள்ளார். தமிழ்நாட்டின் அறிவுத் தொடர்புக்கு மட்டுமன்று, உலகத்தின் அறிவுத் தொடர்புக்கே தமிழ்தான் மூலமாக இருந்து உதவும் என்பதைக் கீழ்வரும் **டாக்டர். கில்பர்ட் சிலேட்டர்** (Dr. Gilbert Slater) அவர்களின்கருத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

Since Dravida is at once the part of India where the most ancient culture still survives and the part which is closest in touch with the twentieth century, in the flow of intellectual commerce between the east and the west, the English speaking students of Tamil will supply many of the most achive intermediaries.

இனி, அறிஞர்களின் அறிவுப் பரிமாற்றத்திற்கு மட்டுமன்று, இந்திய மக்களினத்தின் ஒருமைப்பாட்டுக்கே தமிழ்தான் இணைப்பு மொழியாக இருந்து உதவும் என்று காந்தியடிகள் கூறியதையும் பார்த்தசாரதிக்கு நினைவூட்டுகிறோம். (Calcutta 'Modern Ruview')

இனி, இறுதியாக,

"தெய்வா தீனம் ஜத்ஸர்வம்
மந்த்ரா தீனந்து தைவதம்
தன்மந்த்ரம் ப்ராஹ்மண தீனம்
ப்ராஹ்மணு மம தைவதம்"

(இதன் பொருள்: உலகம் தெய்வத்துள் அடக்கம்; தெய்வம் மந்திரத்துள் அடக்கம்; மந்திரம் பிராமணருள் அடக்கம்; ஆதலால் பிராமணரே நம் தெய்வம்.)

—என்ற காலம் மலையேறி விட்டது. தேசியம், ஒருமைப்பாடு, ஒற்றுமை, இந்தியா என்றெல்லாம் பேசி ஆரிய இனத்துக்கும் மொழிக்கும் பிற இனத்தவரை, குறிப்பாகத் திரவிடரை, இன்னுஞ் சொன்னால் தமிழரை அடிமைப்படுத்தி அரசோச்சிய காலம் கழிந்து விட்டது; இனிமேலும் தமிழினத்தைப் பார்ப்பனர்க்கு மட்டுமன்று உலகில் வேறு எந்த இனத்துக்கும் அடிமைப்படுத்திவிட முடியாது. தமிழினம் விழித்துக் கொண்டது; விழித்துக் கொள்கிறது; விழித்துக் கொள்ளும்! பார்த்தசாரதிகளும் துக்ளக்குகளும் இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

—பெருஞ்சித்திரனார்

செய்திகள்

1. பாவலர் மன்றம், ஈரோடு : 10-ஆம் ஆண்டு விழா :

கடந்த தி. பி. 2010 நளி 28 (12-1-80)ஆம் நாளன்று ஈரோடு அண்ணுசி(ராவ்) வீதி, திருமண மண்டபத்தில் அமைந்த 'பாவேந்தர் அரங்கில்' ஈரோடு பாவலர் மன்றம் தன் 10-ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடியது. விழாவின் காலை நிகழ்ச்சியாக, பாவரசு திரு. **முடியரசனார்** அவர்கள் தலைமையில் பாட்டரங்கம் நடைபெற்றது. பாட்டரங்கைப் பாவலர் திரு. **கொ. செ. சின்னப்பனார்** அவர்கள் தொடங்கி வைக்க, பாவலர் திரு. **சு. தங்கவேல்** வரவேற்புப் பாப் பாடினார். பாட்டரங்கத் தலைவர் முன்னுரைக்குப் பின், **தமிழர்களைத் தட்டி யெழுப்பிய தலைவர்கள்** என்னும் பொதுத் தலைப்பின் கீழ், **தந்தை பெரியாரைப்** பற்றிப் பாவலர் திரு. **முருகுசுந்தரம்** அவர்களின் பாடலைத் திரு. **சந்திர சேகரனும், பேரறிஞர் அண்ணாவைப்** பற்றிப் பாவலர் **எழில் நிலவனும், கலைஞர் கருணாநிதி** பற்றிப் புலவர் **இரா. வடிவேலனும், பெருப்புலவர் குழந்தை** பற்றிப் புலவர் **செ. இராசும்,** பேராசிரியர் **இலக்குவனார்** பற்றிப் பாவலர் **ஆவத்தி வேங்கடாசலமும்,** தமிழ்த் தென்றல் **திரு. வி. க.** பற்றிப் புலவர் **சி. முத்துச்சாமியும், மொழி ஞாயிறு பாவாணர்** பற்றிப் பாவலர் **குமர நடவரச. ஈவப்பனாரும்,** ஈழத்தமிழர் தலைவர் **அமிர்தலிங்கம்** பற்றிப் பாவலர் **தமிழ்க் குமரனும்** பாடல்களை அரங்கேற்றினர். (மறைத்திரு மறைமலையடிகள் பற்றிப் பாடவிருந்த புலவர் பொதிகைச் செல்வனார் வரவில்லை.) இறுதியில் பாவலர் இளங்கவித் தென்றல் நன்றிப் பாப் பாடிய பின் காலை நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

ஆண்டு விழா மாலை நிகழ்ச்சியாகப் பிற்பகல் 4 மணியளவில் திரு. **வேலா. அரசமாணிக்கனார்** தலைமையில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. திரு. **அ. குமரன்** வரவேற்புரையும், திரு. **சி மு. அ. அப்துல் காதிர்** தொடக்கவுரையும், பர். திரு. **கொ. இரா. நாகராசன்** வாழ்த்துரையும் ஆற்றிய பின் தலைவர் முன்னுரை நிகழ்த்தினர். பின்னர் புலவர் திரு. **பொதிகைச் செல்வன்** அவர்கள், 'புறநானூற்றில் வீரம்' என்னும் தலைப்பிலும், புலவர் திரு. **இரா. வடிவேலன்** அவர்கள் 'அகநானூற்றில் காதல்' என்னும் தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்.

விழாவின் இறுதி நிகழ்ச்சியாக 7 மணியளவில் பட்டிமன்றம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன் **தென்மொழி நா. இளமாறன்** அவர்கள் தென்மொழிப் பாடல்கள் சிலவற்றைப் பாடினார். அதன்

பின்னர் திரு. அ. **இராமலிங்கம்** அவர்கள் வரவேற்புரை யாற்றினார். அதையடுத்து 'உலக அரங்கில் தமிழன் மிகமிகத் தாழ்ந்தமைக்கு முழுமுதற்கரணியம், மொழிப்பற்றின்மையே—இனப்பற்றின்மையே—நாட்டுப்பற்றின்மையே' என்னுந் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. நடுவராகப் பாவலரேறு திரு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள்பொறுப்பேற்றார். மொழிப்பற்றின்மையே என்னும் கருத்தில் புலவர் திரு. **பொதிகைச் செல்வன்** அணித் தலைமையில், புலவர் திரு செ. **ஆறுமுகம்**, க.மு. புலவர் திரு **இரா. வடிவேலன்**, க.மு. அவர்களும், இனப்பற்றின்மையே என்னும் கருத்தில், புலவர் திரு. த. **ஆறுமுகம்**, க. மு. அணித் தலைமையில், புலவர் திரு **எழில் நிலவன்**, இல. இ. பேரா. திரு **சதாசிவனார்**, க. மு. அவர்களும், நாட்டுப் பற்றின்மையே என்னும் கருத்தில் கோபி வழக்குரைஞர் திரு. **கே. எசு. ஆனந்தம்** வணி. இ., ச. இ. அணித் தலைமையில் புலவர் திரு. **செ. இராசு**, க. மு., புலவர் திரு **குறிஞ்சிவேந்தன்** க. மு. அவர்களும் அளவையாடினர். பட்டிமன்றம் மிகச் சிறப்பாக இரவு 12-45 வரை நடைபெற்றது. இறுதியில் நடுவர் அவர்கள், இனப்பற்றின்மையே என்னும் கருத்துடைய அணியினர் வென்றதாகத் தீர்ப்புரை கூறினார். இருப்பினும் மொழிவழி இனமும் இனவழி நாடுமே முன்னேற முடியும் என்றும் நடுவர் தம் கருத்தை விளக்கமுற எடுத்துரைத்தார். இரவு 1-30 மணியளவில் பாவலர் திரு. **தமிழ்க்குமரன்** அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது. தொடக்கத்தில் சித்தோடு, தென்மொழி தனித்தமிழ் ஈவகச் செயலர் திரு. ப. தமிழடியான் நடுவர்க்குக் கைத்தறியாடை போர்த்தினார்.

2. ஈரோடு, வேலா அறக்கட்டளைச் சார்பில் நடைபெற்ற புத்தாண்டுப் பொங்கல் விழா :

கடந்த 13-1-80 காலை 9 மணியளவில், ஈரோடு வேலா அறக்கட்டளை உதவியுடன், பசுமைப் பணி மன்றத்தாராலும், திருக்குறள் பேரவையினராலும், பெரியார் மன்றத்தில், புத்தாண்டுப் பொங்கல் விழா நடைபெற்றது. முற்பகல் நிகழ்ச்சிக்குத் தவத்திரு. **வீரசைவப் பேரூர் அடிகளார்** அவர்கள் தலைமை தாங்கினார். அமெரிக்கப் பேரறிஞர் திரு. **சக்திதார அடிகளார்** (Mr. Fread Haeas, California) அவர்களும், வீரசைவ இளந்துறவி **சின்னதண்டா** அடிகளும் விழா முன்னவர்களாக இருக்க, 'திரவிட மக்களின் கடவுள் கொள்கை' என்னுந் தலைப்பில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் ஓர் அரிய ஆய்வுரை நிகழ்த்தினார். அவ்வுரைக்குப் பின்னர் குடந்தை வீரசைவப் பெரிய மடம் அருட்குரவர் **சாரங்க தேசிகேந்திர அடிகளார்** வாழ்த்துரை நிகழ்த்த, பேரூர் அடிகளின் முடிவுரையுடன் காலை நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

பிற்பகல் **பர். வை. இரத்தினசபாபதி** அவர்கள் 'ஆதி சைவமான வீரசைவத்தின் கடவுட் கொள்கை' என்னும் பொருள் பற்றிச் சிறப்புரையாற்றினர். விழா நிகழ்ச்சிகள் 13-1-80 மாலையும் 14-1-80 அன்றும் தொடர்ந்து நடைபெற்றன. அவற்றில் முறையே திருவாளர்கள் **கு. ச. ஆனந்தன், சிலம்பொலி செல்லப்பனர்**, புலவர் **முருகையன்** ஆகியோரும் தவத்திரு. **குன்றக்குடி அடிகளார்** அவர்களும் பெரும்புலவர் திரு. **ச. தண்டபாணி (தேசிகர்)** அவர்களும் கலந்து கொண்டனர்.

பிற செய்திகள்

1. சாந்தி—முருகேசன் வாழ்க :

மதுரை தென்மொழி முகவர் திரு. **குப்புசாமி** அவர்கள் பெயர்த்தியும் திரு. கு. **கோவிந்தராசு** அவர்கள் மகளுமாகிய செல்வி **சாந்தி** என்னும் இராமுத்தாயிக்கும், செல்வன் **சு. முருகேசனுக்கும்** கடந்த 29-11-79 அன்று, திருப்பரங்குன்றம், முருகன் கோவிலில் திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

2. சைதை, தூய அந்தனியார் பள்ளி - குழந்தைகள் ஆண்டு விழா :

சென்னை, சைதை, திருநகரில் உள்ள தூய அந்தனியார் குழந்தைகள் பள்ளியின் சார்பில், கடந்த 24-11-79 அன்று கிண்டி பொறியியற் கல்லூரிக் கலையரங்கத்தில், குழந்தைகள் நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. விழாவில் திரு. **சுரும்பியன்** தமிழ் வாழ்த்துப் பாடினர். **தென்மொழி மறை. நித்தலின்பனர்** வரவேற்புரையாற்றினர். திரு. **ம. பொ. சிவஞானம்** அவர்கள் வாழ்த்துப் பேருரை வழங்கினர். பள்ளி முதல்வர் திரு. **க. ம. வளனரசு** நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது. விழா அறிக்கைகள், சுவரொட்டிகள், நிகழ்ச்சிகள் அனைத்தும் தூய தமிழில் இருந்தது குறிப்பிடத் தகுந்தது.

3. புதுவைப் பெருந்தகையார் திருமுடி சேதுராமனர் மறைவு :

புதுவை மாநில முன்னள் பாராளுமன்ற உறுப்பினரும் பாவேந்தர் பாரதிதாசனரின் கெழுதகை நண்பரும், தமிழறிஞரும், அரிய தமிழ்த் தொண்டரும் மக்கள் தலைவரும் ஆகிய **திருமுடி சேதுராமனர்** அவர்கள் கடந்த 23-12-79 அன்று வேலூர் மருத்துவ மனையில் காலமானர். அவருடைய உடல் புதுவைக்குக் கொண்டுவரப் பெற்று 24-12-79 மாலை கருவடிக்குப்பத்தில் அடக்கம் செய்யப் பெற்றது. அவரின் நீண்ட இறுதி ஊர்வலத்தில் புதுவை அரசியல் தலைவர்கள், இலக்கிய அன்பர்கள், தொழி

லாளர்கள். நூற்றுக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் அனைவரும் கலந்து கொண்டனர். நகரில் பல கடைகள் அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அன்று மூடப்பெற்றிருந்தன. தென்மொழித் தொண்டில் மனமகிழ்ந்திருந்த தமிழறிஞர் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் உறவினர்கள், நண்பர்கள், ஊரார் அனைவர்க்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது

4. ஆப்பிரிக்கத் தக்கார் பல்கலைக் கழகத்தில்—தமிழ்ப் பேராசிரியையாக, பண்டாரகர் தாயம்மாள் அறவாணன் அமர்த்தம்:

செனகால், மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாடு. **தக்கார்** என்னும் கடற்கரைத் துறைமுகப் பட்டினம் இதன் தலைநகரம். இந்நகரில் உள்ள புகழ்பெற்ற தக்கார் பல்கலைக் கழகம், முதன் முறையாகத் தமிழை இலக்கியத் துறையில் அறிமுகப்படுத்தியுள்ளது. பிரஞ்சு பயிற்று மொழியாகவும், முதன்மொழியாகவும் இருக்கும் இந்நாட்டுப் பல்கலைக் கழகத்தில், தமிழ் இரண்டாம் மொழியாகப் பயிற்றுவிக்கப்பெறும். தமிழைப் பயிற்றும் பேராசிரியராக, பா். **தாயம்மாள் அறவாணன்** அமர்த்தப் பெற்றுள்ளார்.

தமிழர்க்கென இல்லாமல் தமிழுக்கு எனவே, இங்குத் தமிழ் அறிமுகம் ஆகியுள்ளது. இங்குத் தமிழர் குடியிருக்கவில்லை என்பதும், பயில இருக்கும் அனைவரும் ஆப்பிரிக்கர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஐம்பத்தொரு நாடுகள் உள்ளன. தென்னாப்பிரிக்காவிலும், மொரீசியசுத் தீவிலும் தமிழர் ஆயிரக் கணக்கில் உள்ளனர். இருந்தும், இதுவரை ஆப்பிரிக்கப் பல்கலைக் கழகம் எதுவும் பல்கலைக் கழக அளவில், தமிழை அறிமுகப்படுத்தவில்லை. ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே முதன் முறையாக, முதல் நாடாக, செனகால் நாடு, தமிழைப் பல்கலைக் கழக அளவில் பயிற்றுவிக்கிறது.

இதற்கு முழுக் கரணியர், இந்நாட்டின் தலைவர் பா். **செங்கோர்** ஆவார். சிறந்த நூல்களின் ஆசிரியரும் மிகப் புகழ்பெற்ற பிரஞ்சு மொழிப் பாவலரும் ஆகிய செங்கோர், தமிழ் மொழி மேலும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் பேரார்வலர். பேரறிஞராகிய இவர் 1974-இல் சென்னைக்கு வருகை தந்தார். 1980-இல் மதுரையில் நிகழ இருக்கும் தமிழ் மாநாட்டிலும் கலந்து கொள்ள இசைந்துள்ளார்.

திராவிட மொழிகளுக்கும், ஆப்பிரிக்க மொழிகளுக்கும் இடையே ஒற்றுமைகள் உள்ளன என்பது பிரெஞ்சு அறிஞர்களால் முதன் முதல் கண்டறியப்பட்டது. பின்பு பழக்க வழக்கப் பண்பாட்டு அளவிலும் ஒற்றுமைகள் அறியப்பட்டு இது தொடர்பான ஆய்வு,

தக்கார் பல்கலைக் கழகத்தில் இணைப்பாக இயங்கும் ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகத்தில் (IFAN) நிசழ்ந்து வருகிறது. மொழி களுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறை ஆய்வு நடத்தி வருகிறது.

பேராசிரியராகப் பொறுப்பேற்றிருக்கும் பர். **தாயம்மாள் அறவாணன்** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு.

பிறப்பு : 23-5-1944.

கல்வி : க. மு; ஆ. அ. (எம். ஏ; பி. எச். டி).

பட்டறிவு : பச்சையப்பன் நிறுவனமான சென்னை-செல்லம் மாள் மகளிர் கல்லூரியில் துணைப் பேராசிரியர். (இக்கால் விடுப்பில் உள்ளார்)

படைப்பு : பெண்மொழி, புதிய கோலங்கள் முதலான நூல்கள்.

வழிச் செலவு : அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, இத் தாலி, சப்பான், சிங்கப்பூர், மலேசியா, ஆங்காங், மேற்கு செருமனி, காம்பியா ஆகிய நாடுகள்.

பேராசிரியர் **தாயம்மாள் அறவாணன்** அவர்கள் தம் பணியமர்த்தம் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு: 51 விடுத் துள்ளார்கள். அதற்கு நன்றி தெரிவிப்பதுடன், அம்மையார் அவர் களின் தமிழ்த்தொண்டும் புகழும் மேன்மேலும் சிறந்து விளங்கத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

5. நண்பர்கள் இலக்கிய மன்றம்—சித்தோடு

கடந்த சுறவம் 2 (16-1-80)-ஆம் பக்கல் பெரியார் மாவட்டம் சித்தோட்டில், காலை 10 மணியளவில் நண்பர்கள் இலக்கிய மன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திரு. **இராதாகிருட்டிணன்,** க. இ. வரவேற்புரையாற்றினார். புலவர். திரு. **மு. கணேசன்,** க. மு. தலைமை தாங்கினார். விழாவில் திரு. **ப. இரவீந்திரன்** அவர்கள் அகிலனின் 'எங்கே போகிறோம்' என்னும் நூல் பற்றியும், திரு. **கொ. துரைசாமி** அவர்கள் மு. மேத்தாவின் 'கண்ணீர் பூக்கள்' என்னும் நூல் பற்றியும், திரு. **மணிதேவன்** அவர்கள் செயகாந்தனின் 'ஊருக்கு நூறு பேர் எங்கெங்கு காணினும்' என்பது பற்றியும், திரு. **கலைப்பித்தன்** அவர்கள் 'பர். மு. வ.வின் அகல் விளக்கு' பற்றியும், திரு. **தமிழடியான்** 'பெருஞ்சித்திரனாரின் பாடல்கள்' பற்றியும் கருத்துரை யாற்றினர். மாலை 6 மணியளவில் பாட்டரங்கம் நடைபெற்றது. திரு. **குமர நடவரச ஈவப்பனார்** அவர்கள் பாட்டரங்கிற்குத் தலைமை தாங்கினார். திருவாளர்கள் **தேவமணி, கலைப்பித்தன், ப. இரவீந்திரன், கொ. துரை**

சாமி, தமிழடியான், ப. வீரமுத்து ஆகியோர், 'ஊர்வலம்', 'செந்நெல்', 'குமுகாயமும் இலக்கியமும்', 'கண்ணீர்ப் பூக்கள்', 'கொல்லாமை', 'மானம்', என்னுந் தலைப்புகளில் முறையே பாடல்கள் பாடினர். திரு. தேவமணி நன்றிப்பா பாடிட விழா இனிது நிறைவுற்றது.

6. கொற்கைத் தமிழ் மன்றம், ஏரல்—பொங்கல் விழா

நெல்லை மாவட்டம், ஏரலில், கடந்த 26-1-80 மாலை 4-30 மணியளவில் பொங்கல் விழா நடைபெற்றது. விழாவில் பாட்டரங்கம் உரையரங்கம் நிகழ்ந்தன. புலவர். திரு. **ச. சத்தியசீலனார்** க. இ. வரவேற்புரையாற்றினார். புலவர். திரு. **க. ஐயாத்துரை** க. மு. அறிக்கை படித்தார். பாட்டரங்கத்திற்குப் புலவர் திரு. **ச. சிவசங்கு** தலைமையேற்றார். புலமைத் திருவாளர்கள் **சங்கர பொன்னம்பலனார், இல அறவேந்தனார், இரா. முத்து விநாயகனார், திருவாழ்மார்பனார், காசினிவேந்த பெருமானார்** ஆகியோர் திருக்குறள் தலைப்புகளில் பாட்டரங்கேறினர். உரையரங்கத்திற்குப் புலவர். திரு. **வீ. செந்தில் நாயகனார்** தலைமை தாங்க அறிஞர் பலர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். விழா சிறப்புற நிறைவுற்றது.

நன்கொடைகள்

1. தென்மொழி **நா. இளமாறன்** இளம் பொறியாளர், ஈரோடு, சென்ற 31-10-79-இல் நடந்த பல்லடம் திருக்குறள் மன்றச் சிறப்புக் கூட்டத்தின் முடிவில் தென்மொழி வளர்ச்சிக்கென உரு: 15 நன்கொடை அளித்தார். அவர் பேருள்ளத்தைத் தென்மொழி வாழ்த்துகிறது.

2. பெரியார் மாவட்டம், அத்தாணி, திரு. ச. இரா. பரதன்—திருவாட்டி தமிழரசி ஆகியோர்க்குக் கடந்த மடங்கல் ௪ (20-8-79) அன்று பிறந்த பெண் மகவுக்குக் **கவின்முல்லை** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 10 நன்கொடை தரப்பெற்றது. **கவின்முல்லை** பல்லாண்டு வாழ்க எனத் தென்மொழி வாழ்த்துகிறது.

3. திரு. மு. த. சின்னத்துரை—(c/o. 56. A.P.O.)—செல்லம்மாள் இவர்கட்கு 16 9-79 அன்று தஞ்சையில் பிறந்த பெண்மகவுக்குப் **பூந்தமிழ்** என்று பெயர் சூட்டியதன் நினைவாக உருபா 10 நன்கொடை வரப்பெற்றோம். **பூந்தமிழ்** பல்லாண்டு வாழ்க எனத் தென்மொழி வாழ்த்துகிறது.

4. மருதவல்லிபாளையம் திரு. விசுவநாதன்—காசியம்மைக்குக் கடந்த 28-10-79 அன்று பிறந்த ஆண்மகவுக்குப் **பூங்குன்றன்**

எனப் பெயரிட்டதன் நினைவாகத் தென்மொழிக்கு உருபா 10. நன்கொடை அளித்துள்ளார். **பூங்குன்றன** பல்லாண்டு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

5. நெய்வேலி முகவர் **தென்மொழி சுப. திருமாறன்** அவர்கள் 4-1-80 அன்று தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 5/- நன்கொடை விடுத்துள்ளார். அவர் அருளுள்ளத்தைத் தென்மொழி வாழ்த்துகிறது

6. திரு **மோகன்** (c/o. 56. A. P. O. அவர்கள் 7-1-80 அன்று தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 4. நன்கொடை அளித்துள்ளார். அவர் தமிழ் நெஞ்சம் வாழ்க எனத் தென்மொழி வாழ்த்துகிறது.

7. திரு. **தங்கவேலு** (c/o. A. P. O) அவர்கள் 7-1-80 அன்று தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 4 நன்கொடை விடுத்துள்ளார். அவர் தமிழுள்ளம் வாழ்க எனத் தென்மொழி வாழ்த்துகிறது.

ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தென்மொழியில் எழுதி வந்த 'ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' எனும் தொடர்கட்டுரை நூல் வடிவில், கோவைத் **'தென்மொழி இயவ'** வெளியீடாக வெளிவந்து விட்டது. அன்பர்கள் வாங்கிப் பயன் பெறுக,

விலை உரு: 2-00 (அஞ்சல் செலவு தனி)

நூல் கிடைக்குமிடம் :

1. தென்மொழி, சென்னை-5.

2. **அரங்க—தமிழ்மணி,** தென்மொழி இயவம், 45, காமராசர் சாலை, கோவை-15. மற்றும் கோவையில் தென்மொழி கிடைக்கும் கடைகளிலும் கிடைக்கும்.

இணைத்துப் படிக்க

தென்மொழி, சுவடி 16 ஓலை 4-இல் வெளியாகியுள்ள, பெருஞ்சித்திரனார் பாடல்கள்—கனிச்சாறு வெளியீட்டு விழா—நிகழ்ச்சிச் சுருக்கச் செய்தியில் (பக்கம் 30), திறனுய்வரங்கத்தில் 'இளைய தலைமுறை' என்னுந் தலைப்பில் புலவர். திரு. **த. ச. தமிழனார்** பேசிய செய்தி விடுபட்டுள்ளது. தவற்றுக்கு வருந்துகிறோம். அன்பர்கள் அச்செய்தினையும் இணைத்துப் படிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

....ஆசிரியர்

என் இலங்கைச் செலவு

—பெருஞ்சித்திரனார்.

வண்டி கரணவாயை அடையும் பொழுது மணி 12-ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த இருள் சூழ்ந்த பகுதியில் ஓர் ஒளிச் சிதறல் தென்பட்டது. மக்கள் நடமாட்டமும் ஒலிபெருக்கியில் பேச்சொலியும் மக்கள் ஆரவாரமும் கேட்டன. மாநாட்டுப் பந்தலின் முன் வண்டி நின்றது. மாநாட்டை ஊடுருவி ஒரு சிலர் என்னை மேடைக்கு அழைத்துச் சென்றனர். மேடையில் அமர்ந்த நான் மாநாட்டுக்கு வந்திருந்த மக்களை நோட்டம் விட்டேன். எனக்குப் பெரு வியப்பாக இருந்தது. கூட்டம் மாநாட்டுப் பந்தலுக்குள் நெருங்கி நிரம்பி வழிந்தது. சிறியவரும் பெரியவரும் மாணவரும் இளைஞரும் கற்றவரும் கல்லாதவர்களுமாக அங்கு ஈராயிரத்துக்கும் அதிகமான மக்கள் கூட்டம் பந்தலை அடைத்துக் கொண்டிருந்தது. அந்த நள்ளிரவிலும் மக்கள் தூக்கக் கலக்கமின்றி ஊக்கமும் உணர்வும் நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். அமர்ந்திருந்த மக்கள் பக்கத்தில், மூட்டை முடிச்சுகளும் பைகளும் நிறைந்திருந்ததைப் பார்க்கையில் அவர்கள் அண்டை அயலிலுள்ள ஊர்களிலிருந்தெல்லாம் வந்து திரண்டிருப்பதாகப் பட்டது. அந்த மாநாடு ஓர் அரசியல் கட்சி மாநாடன்று. திருக்குறளின் பெயரால் கூட்டப் பெற்ற மாநாடு. நம் நாட்டில் ஓர் அரசியல் கட்சி மாநாடாக இருந்தால்தான் இவ்வளவு பெரிய கூட்டத்தை எதிர் பார்க்கலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் நிலை வேறு. அங்குள்ள தமிழின மக்களை எந்த ஒரு பொது நிகழ்ச்சியின் பெயராலும் ஓரிடத்தில் கூடும்படி செய்துவிடலாம். அதற்குக் கரணியம் அங்கிருந்த—அவர்களுக்கு ஏற்பட்ட ஓர் ஆட்சித் தாக்குதலே. அங்குள்ள தமிழர்கள் அனைவர்க்கும் தாங்கள் ஓர் உரிமையற்ற நாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பதான ஓர் உணர்வு இருக்கிறது. தமிழினம் சிங்களவர்களால் அலைக்கழிக்கப் பெற்றுப் பலவகையிலும் துன்புற்றுக்கொண்டிருக்கும் ஒரு வெளிப்படையான நிலையை எந்தச் சூழலிலும் உணர்த்தக்கூடிய வகையில் தமிழர்கள் அங்கு நடந்து கொள்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று கூடித் தங்கள் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் எந்த ஓர் நிகழ்ச்சியிலும் தங்களை எளிதாக இணைத்துக் கொள்கிறார்கள் என்ற உண்மையை அங்குச் சென்றிருந்தபொழுது நேரிடையாக உணர்ந்தேன். எனவேதான் திருக்குறளின் பெயரால் கூட்டப் பெற்ற ஒரு மாநாட்டிற்கும் நெடுந்தொலைவிலிருந்தெல்லாம் இவ்வளவு பேரளவில் தமிழினமக்கள் இரவென்றும் பகலென்றும் பாராமல் வந்து கூடியிருக்கிறாகள் என்பதை அறிய முடிந்தது.

மாநாடு முந்தின நாள் காரிக்கிழமையிலிருந்து தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. அறிஞர்கள் பலரும் அரசியல்

தலைவர்கள் சிலரும் கலந்து கொண்டு அரிய பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருந்தார்கள். பாட்டரங்குகள், கருத்தரங்குகள், நாடகங்கள் பல நடந்திருந்தன. அன்று காலையில் ஒரு பட்டிமன்றமும் நடந்திருந்தது. மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியும் பேச்சுப் போட்டியும் அவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்குதல்களும் ஆன நிகழ்ச்சிகள் நடந்து முடிந்திருந்தன. மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக ஒரு நாடகமும் அந்தப் பின்னிரவில் நடக்க இருந்தது. தொடர்ந்து இரண்டு நாட்களிலும் அனைத்து நிகழ்ச்சிகளையும் கண்டுகளித்த நிறைவு அங்குக் கூடியிருந்த மக்கள் முகங்களில் காணப்பெற்றது. சிறு சோர்வோ களைப்போ அவர்களிடம் இருக்கவில்லை.

ஒலிபெருக்கியில், நான் வந்து மாநாட்டில் கலந்து கொள்ள இருப்பது பற்றிப் பல்முறைகள் அறிவிக்கப் பெற்றிருந்தது. எனவே மாநாட்டு மேடையில் நான் சென்று அமர்ந்த பொழுது தெரிவிக்கப் பெற்ற அறிவிப்பைத் தொடர்ந்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தால் கைதட்டி எனக்கு வரவேற்புத் தெரிவித்தனர். அதன் பின்னர் என்னைப் பேச அழைத்தனர். சரியாக ஒரு மணி நேரம் பேசினேன். மக்கள் மிக அமைதியாக, மிகமிக அமைதியாக இருந்து அந்தப் பேச்சைக் கேட்டனர். அயல்நிலப் பகுதியில் உள்ள மக்களாகவே அவர்களை நான் கருதவில்லை. தமிழ்நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்களாகவேதான் அவர்களை என்னால் கருதமுடிந்தது என் பேச்சில், திருக்குறள் ஒன்றுதான் சிதறிக் கிடக்கும் தமிழினத்தை ஒன்றிணைக்கும் ஆற்றல் வாய்ந்தது என்றும், அது தமிழின வீழ்ச்சியை மீட்க வந்த நூல் என்றும், தமிழினம் தன் அறிவுநிலை, கலையியல், பண்பாட்டு வாழ்வியல் நிலைகளில் திரிந்து, சரிந்து, அழிந்து விடாமல் கட்டிக் காப்பதன் பொருட்டாகவும், ஆரிய இனத்தின் மாய மயக்குகளிலும் போலிச்சமய ஆரவாரங்களிலும் சிக்கிச் சீரிழந்து போகாமல் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் மிக எச்சரிக்கையாக எழுதி வைக்கப் பெற்ற நூல் திருக்குறள் என்றும் என் சொற்பொழிவில் பலவாறான அகப்புறச் சான்றுகளைக் கூறி வலியுறுத்தினேன். இடையிடையே இலங்கைத் தமிழர்களின் இன, அரசியல் விழிப்புணர்வைப் பாராட்டியும், சிங்களவர்களின் கொடுமைகளைச் சுட்டியும் குறிப்புரைகளாகச் சில கூறினேன். இறுதியில் உலகெங்கணும் உள்ள தமிழினம் விரைவில் ஒன்றுகூடித் தனக்கென்று விடுதலை பெற்ற உரிமை நாட்டை அமைத்துக் கொள்ளப்போவது உறுதி என்றும், அதற்கு அங்குத் திரளாகக் கூடியுள்ள மக்கள் கூட்டமே சான்று என்றும் கூறி விடைபெற்றேன். மக்கள் உரத்த கையொலியுடன் என் கருத்தை வரவேற்று ஆரவாரித்தனர். சரியாக ஒரு மணிக்கு என் சொற்பொழிவு முடிந்தது. எல்லாரிடமும் விடைபெற்று இரவு ஒன்றரை மணியளவில் வேலணை புறப்பட்டோம். கா. பொ. இ

வீட்டை யடையும் பொழுது மணி இரண்டரை. மூன்று மணியளவில் ஓய்வு கொண்டேன்.

15. அமிர்தலிங்கம் துணைவர்களின் சந்திப்பு

22-5-78 திங்கள் காலை 7-30 மணியளவில் படுக்கையிலிருந்து எழுந்தேன். முந்தைய இரவு மிகக் காலந்தாழ்ந்து உறங்கச் சென்றதாலும், வழிச் செலவாலும் உடல் கொஞ்சம் சோர்வுற்றிருந்தது. அன்று மாலை மூன்றும் நாள் மாநாட்டு நிகழ்ச்சி நடைபெற விருந்தது. காலைக் குளிப்பின் பொழுது அழுக்கடைந்த சில உள்ளாடைகளைத் துவைத்துப் போட்டேன். காலை 9-30 மணியளவில் சிற்றுண்டியை முடித்தேன். பண்டிதர் கரணவாய் மாநாட்டு நிகழ்ச்சியைப் பற்றி விளக்கமாகக் கேட்டு மகிழ்ந்தார். இடையில் தெல்லிப்பழை **நா. பத்மநாபன்** என்பவர் என்னைப் பார்க்க வந்து தமிழக அரசியல், மக்கள் வாழ்வு நிலைகளைப் பற்றிப் பேசியிருந்து விட்டுச் சென்றார். செல்லும் பொழுது ஒருவேளை தம் வீட்டில் வந்து உணவு கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். நேரம் வாய்த்தால் வருவதாகக் கூறினேன். அவர் சென்றபின் புலவர், **சிவபாத சுந்தரனார்** என்பவர் வந்தார். அவர் புறப்பொருள் வெண்பா மாலைக்கு ஓர் உரையெழுதியிருந்தார். அந்த நூலின் படியொன்றினை எனக்கு அன்பளிப்பாகக் கொண்டு வந்திருந்தார். அதனை எழுதிய இன்றியமையாமை பற்றியும், அச்சிட்டு முடிக்கத் தாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறி, அதன் இரண்டாம் பகுதியை எழுதி வைத்திருப்பதாகவும் அதனை அச்சிடுவிக்க முயன்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அவ்வகையில் தமிழகத்திலுள்ள பதிப்பகங்களை அணுகுவதற்கு நான் ஏதும் உதவ முடியுமா என்றும் கேட்டார். நான் இங்குள்ள நூலார்வ நிலைகளைக் கூறி தமிழகம் வரும்பொழுது என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வதாக உரைத்தேன். அவர் மகிழ்ச்சியுடன் விடை பெற்றார்.

திரு. பத்மநாதனும், புலவர் திரு. சிவபாத சுந்தரனாரும் கல்வி நிலைகளில் வேறுபாடுற்றவர்களானாலும் அவர்களும் அவர்களைப் போன்ற யாழ்ப்பாணத்தவர்களும் பேசுகின்ற தமிழ் என்னை வெகுவாகக் கவர்ந்தது. தமிழகத்தில் உள்ளபொழுது கூட இலங்கை வானொலியில் யாழ்ப்பாணத்தில் பேசப் பெறும் தமிழ் உரையாடல்களை, அங்கிருந்து ஒலிபரப்பப் பெறும் நாடகங்களில் கேட்டுப் பலமுறைகள் மகிழ்ந்திருக்கின்றேன். அவர்கள் பேசுகின்ற தமிழ் நடையும், ஒலிப்பு முறையும் சிறப்பாக இருந்தாலும், அவர்கள் தமிழில் தமிழக மக்களின் மொழிநடையில் உள்ளது போலவே கலப்பு மிகுந்திருந்தது. இந்தியாவில் நடைபெற்ற அராபிய, பிரஞ்சிய, போர்த்துக்கீசிய, ஆங்கில ஆட்சியாலும், ஆரிய இன ஆளுமையினாலும் தமிழ் மொழி எவ்வாறு சிதைவுற்றும் கலப்புற்றும், தன் செழுமையும் தனிமையும் தூய்மையும் கொண்ட நிலையில் தாழ்வுற்றுப் போனதோ அவ்வாறே இலங்கையிலும் அங்கு

ஏற்பட்ட போர்த்துக்கீசிய, ஆலந்திய பிரஞ்சிய, ஆங்கிலேய ஆட்சி யழுத்தங்களால் தமிழ்மொழி திரிபுற்றுப் போனது, மேலும் சிங்கள மொழியால் நேரிடையாகவும், சமசுக்கிருதத்தோடு அதற்குள்ள இணைப்பால் மறைமுகமாகவும் அங்கு வழங்கும் தமிழ் தாக்குண்டு நிற்கிறது.

பெரும்பாலும் யாழ்ப்பாணத் தமிழர் பேசுகின்ற தமிழில் போர்த்துக்கீசிய மொழியினதும், ஆலந்து மொழியினதும் ஆளுமை மிகுதியாக ஊடுருவி நிற்கின்றது. மலைத்தோட்டங்களில் வாழும், இங்கிருந்து சென்ற இந்தியத் தமிழர்கள் பேசுகின்ற தமிழ் ஓரளவு நம் நாட்டுச் சிற்றூர்ப்புற மக்கள் பேசுகின்ற தமிழைப்போல் இருக் கிறது. யாழ்ப்பாணத் தமிழில் கதிரை (நாற்காலி), மேசை, அலுமாரி, வாங்கு (Bench), பிக்கான் (பிக்காக்சு), லாந்தர், கோப்பை, போத்தல் (Bottle), பீப்பாய், கராம்பு, கொய்யா, அன்னுசி, வத்தாலை (ஒருவகைக் கிழங்கு), வத்தகை (ஒருவகைப் பழம்), வினுக்கிரி (காடி) சப்பாத்து (Chapples), கம்மிசை (சப்டை), ரேந்தை (Lace), தீதாள் (தைக்கின்ற விரல் மூடி), மேத்திரி சன்னல், விருந்தை (தாழ்வாரம், Veranda) கிருதி (கதவுக்கு மேல் உள்ள காற்று வரும் வழி), வத்தை (ஒருவகைப் பெரிய படகு), நத்தார் (கிறித்துமசு விழா), தவறணை (கள்ளுக்கடை), கரத்தை (மாட்டு வண்டி), ரோதை (சக்கரம்)—முதலிய நூற்றுக்கணக்கான **போர்த்துக்கீசிய** சொற்களும்,

லாச்சி, (மிசையிலுள்ள இழுவை (Drawer), தாச்சி (வாணலி), பிசுக்கால் (வழக்கு மன்ற நடவடிக்கையாளர் 'அமீனு') நொத்தாரிசு (திருமணப் பதிவாளர்), சக்கடத்தார் (மடப் பொறுப் பாளர்), உலாந்தா (நில அளவையாளர்) போஞ்சி (அவரை, Beens) கலாவரை (சீட்டாட்டத்தில் 'கிளாவர்'), வீறு (சீட்டாட்டத் தில் Jack), கக்கூசு—முதலிய ஆலந்து மொழிச் சொற்களும் தங்கு தடையின்றித்தமிழ்ச் சொற்களைப் போலவே வழங்குகின்றன. இக் கலப்பு நிலைகளைப் பற்றி அறிஞர்கள் சிலரைத் தவிர எவரும் கண்டு கொள்வதாகவோ கவலைப்படுவதாகவோ தெரியவில்லை. பெரும் பாலும் இலங்கைத் தமிழர்களுக்கு மொழியுணர்வைவிட இன வுணர்வே இப்பொழுது தலைதூக்கியிருக்கிறது. அதற்கு அவர் களுக்கு நேர்ந்த இனத் தாக்கங்களே அடிப்படைகளாக இருக்கலாம். கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெருந்தமிழ்ப் புலவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள் எனினும், இன்றும் இருந்து வருகிறார்கள் எனினும், அங்குள்ளவர்களுக்கு மொழியார்வம் மிக்குள்ளது எனினும், இங்குத் தோன்றியுள்ளதுபோல் தூய் தமிழ் இயக்க வுணர்வு அங்கு இன்னும் தோன்றிவிடவில்லை. இது தொடர்பாக அங்கு நடந்த என் சொற்பொழிவுகளில் பல இடங்களிலும் வலி யுறுத்தியும் வற்புறுத்தியும் கூறியிருக்கின்றேன். (தொடரும்)

திருக்குறள் உலகப் பொது மறையா?

—கொண்டல் வண்ணன்

ஆம், அதிலென்ன ஐயம் என்று கேட்கிறீர்களா? உலகப் பொது' என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால், 'மறை' என்று கூறுதல் முறையன்று. 'மறை' என்பதற்கு மறைத்து வைத்திருப்பது என்பது பொருள்—வடமொழி வேதங்கள்தாம் பல பொருட்களை மறைத்துச் சொல்கின்றன. எனவே அவற்றிற்கு அப்பெயர் சாலப் பொருந்தும். திருக்குறள் எதனை மறைக்கின்றது? அனைத்தையும் வெளிப்படையாகத்தானே உரைக்கின்றது. எனவே 'மறை' என்ற பெயர் பொருந்தாமை உணரப்படும்.

திருக்குறளுக்கு 'உலகப் பொதுமறை' என்ற பெயர் யாரால், எக்காலத்தில் இடப்பெற்றிருந்தாலும் வடமொழி மறைகளோடு ஒப்பிட்டே அப்பெயரை இட்டிருப்பர் என்பது வெளிப்படை. திருக்குறளுடன் ஏனைய நூல்களை ஒப்பிடவும் கூடுமோ? அதுவும் ஆரியர் வேதங்களை—'சூதாகச் சொல்லப்பட்டவை' என வள்ளலார் குறிப்பிடும் நான்மறைகளை—ஒப்பிடுதல் முறையோ? ஒப்பிட நினைப்பதும் தவறாகும்.

அவ்வாறாகத், திருக்குறளில் உள்ளதெல்லாம் நால்வேதப் பொருளே, அதனையே அனைவர்க்கும் விளக்கும் வண்ணம் திருக்குறள் எடுத்துரைக்கிறது என்று கூறுதல் எத்துணைப் பேதைமை? ஆனால், கடைக்கழகப் புலவர்களே, திருவள்ளுவமாலையில் அவ்வாறு பாடியுள்ளனர் என்றால் அது பேதைமையினாலோ? அன்று. ஆரியரைத் தேவர்கள் என்றும், அவர் மொழி தேவமொழி என்றும், அவர்தம் வேதங்கள் மிக உயரிய நூல்கள் என்றும் அவர்கள் கருதிய பெருமயக்கத்தால்தான் அவ்வாறு பாடியிருக்க வேண்டும்.

திருவள்ளுவமாலை, திருக்குறளையும், திருவள்ளுவரையும் புகழ்ந்து கூறுவது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், அந்தப் புகழ்ச்சி எவ்வகையில் அமைந்துள்ளது என்று நுணுகிப் பார்த்தால் அக்காலத்து ஆரியரின் சூழ்ச்சியும், அச்சூழ்ச்சி வலையில் மயங்கி வீழ்ந்த நம் கழகப் புலவர்களின் சிறுமையும் விளங்கும்.

திருவள்ளுவமாலையில் முதற்பாடலே 'அசரீரி' என்ற பெயரில் காணப்படுகிறது. அப்பாட்டின் உரையில் வள்ளுவர் என்ற பெயருக்குத் தரப்படும் விளக்கம் இதோ :—

"வள்ளுவர்—வண்மையுடையவர் அது, வேதத்தில் இலைமறைகாய் போல் பல இடங்களிலும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களை எல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவர் என்னும் காரணம் பற்றி வந்த பெயராயிற்று."

இனி, அக்காலத்துப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி பாடிய பாட்டில்

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான் மறைந்து தந்துரைத்த நூன்முறை...."

என்றுள்ளது. நான்முகனாகிய பிரம்மனே முன்பு, தான் வடமொழியில் சொன்ன வேதங்களில் உள்ள மெய்ப்பொருள்களை எல்லாம் தொகுத்துத் தமிழில் முப்பாலாகப் பாடினான், என்று புனைந்து கூறும் 'அழகு'தான் என்னே! இனி, இப்பாட்டின் உரை அதைவிட 'அழகான'தாகும்.

"இவ்வாறு, வழி பாடு கூறினான், 'மன்னன் எப்படி' மன்னுயிர் அப்படி' ஆகலின்" என்கிறார் உரைகாரர். ஆகவே' அக்காலத்துத் தமிழ்மன்னன் மக்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருந்திருக்கிறான்—ஆரியருக்கு எப்படி அடிமை பூண்டொழுகுவது என்பதில்!

அடுத்து, வெள்ளிவீதியார் என்ற புலவர்,

"செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே"

என்று தேற்றமாகக் கூறுகிறார். (செய்யாமொழி-வேதம்; பொய்யாமொழி-திருக்குறள்). இவ்வாறு தேற்றமாகக் கூறுவதற்கு உரையில் உள்ள விளக்கம் குறிப்பிடத்தக்கது.

"அது (வேதம்) வடமொழியும், இது (திருக்குறள்) தென்மொழியுமாய் நின்று சில வேறுபாடுடையன போல் தோன்றினும், நுண்ணுணர்வால் நோக்குவார்க்குக் கருத்து வேறுபடாமையின் பொருளொன்றே எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறினார்." அந்த நுண்ணுணர்வு ஆரியர்க்கும், ஆரிய அடிவருடிகட்கும் மட்டுமே உண்டு. போலும்!

மிகச் சிறந்த புலவர்களுள் ஒருவரான மாங்குடி மருதனாரே,

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கி...."

என்று குறிப்பிடும்போது நமக்கு வருத்தமே மிஞ்சுகிறது. பெருஞ்சித்திரனார் என்ற புலவர் தமது பாட்டில், திருக்குறள் உயர்ந்ததா? **அதைப் பெற்றெடுத்த வேதம் உயர்ந்ததா?** என்று வினா எழுப்பி அதற்கு விடை காண முயலுகிறார்.

வண்ணக்கஞ் சாத்தனார், திருக்குறளைப் புகழுமுகத்தான் வடமொழிக்கும் தென்மொழிக்கும் ஒப்புமை நிறைவு செய்து நடுநிலை யாளர் போலப் பேசுகிறார். 'வடமொழியில் வேதம் உள்ளது;

தென்மொழியில் திருக்குறள் உள்ளது. அதனால் இரண்டையும் ஒப்பிட்டு ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்தது என்று சொல்ல இயலாது'' என்கிறார். இப்பாட்டின் உரையில், "வேதமுடைமை பற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு, தமிழில் திருக்குறள் உண்டாதலின் இனி இல்லை'' என்றுள்ளது.

இதுவரை கூறியவற்றிலிருந்து, தெளிவாக அறியலாம். திருக்குறளைப் புகழ்ந்து பாடப்பட்ட திருவள்ளுவமாலையில் தவறாமல் ஆரியரின் வேதங்களும் புகழ்ந்து பாடப்பட்டுள்ளன. இல்லை யில்லை. **வேதங்கள்தாம் திருக்குறளுக்கு முதனூல் என்று வலிந்து நிலை நாட்டப்பட்டிருக்கிறது.** இதற்கு நிலைநாட்டல், தமிழ்க்கழகப் புலவர்களாலேயே மிக அழகாகச் செய்யப்பட்டுள்ளது. இத்தகு, நிலைநாட்டுதலால், திருக்குறளின் உண்மைப் பெருமையும், நான்மறைகளின் உண்மைச் சிறுமையும் மிகத் திறமையுடன் மறைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அந்தச் சூழ்ச்சியை நாம் அறிந்து கொள்ளச் சில புலவர்கள் உதவுகிறார்கள். திருக்குறள் வேதப் பொருளை விளக்குவ தன்று; திருவள்ளுவருடைய மெய்யறிவின் விளைச்சல் என்பதை நக்கீரர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். 'தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால் முப்பாலை மொழிந்த வள்ளுவர்க்கு உலகம் என்ன கைம்மாறு செய்ய இயலும்?' என்று வினவுகிறார் அவர். ஆனால், அதிலும் உரையாசிரியர் தம் திறமையைப் பயன் படுத்தி வேதத்தின் **பெருமையைப்** புகுத்திவிடுகிறார். 'தானே முழுதுணர்ந்து' என்பதற்கு 'வேதப் பொருளைக் குருவாக இருந்து பிறர் அறிவிக்க அறிந்திலர்; தாமே அறிந்தார்' என்று உரையில் வலிந்து கூறும்போது, நக்கீரர் இன்னும் சற்றுத் தெளிவாகப் பாடி யிருக்கலாமே எனத் தோன்றுகிறது.

ஆனால் கோதமனார் என்ற புலவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற வகையில் உண்மையை விளக்குகிறார்.

ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றி உரைத்து ஏட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.

'நான்மறைகளை ஏட்டிலே எழுதி வைத்தால் (எழுதுவதற்கு வட மொழிக்குத் தனி எழுத்தில்லை என்பது வேறு பற்றியும்) அனைவரும் அதைக் கற்பார்கள். கற்றால், அதன் **'ஆற்றல்'** அழிந்துவிடும் என்று ஆரியர்கள் தம் வேதங்களை வீணே போற்றி உரைப் பார்கள். ஆனால் தென்மொழி கண்ட திருக்குறள் அப்படியன்று. ஏட்டிலே எழுதி வல்லவரும், மெலியாரும் ஆகிய அனைவரும் கற்றாலும் அதனுடைய ஆற்றல் அழியாது' என்று விளக்குகிறார்.

எனவே, வேதத்தின் உண்மையான **ஆற்றல்** வெளிப்படுகிறது. ஆரியப் பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்க்குத் தெரியாமல்—மற்றவர்கள் அதனைக் கல்லாமல்—கற்று அதன் பொருளற்ற பிதற்றல்களை உணர்ந்து அதனைத் தூற்றுமல்—இருக்கும் வரைதான் நான்மறைக்குப் பெருமை, ஆற்றல் எல்லாமே.

இப்பாட்டுக்கு உரை கூறும்போது உரைகாரர் சற்றுத் திணறுகிறுர். அந்தத் திணறலில் ஓர் அரிய உண்மை அவர் வாய்வழியாகவே வெளிப்பட்டுவிடுகிறது. வேதத்தில் பொருட்சிறப்பு ஏதுமில்லை; வெறும் ஓசைகள்தான் அதன் சிறப்பு(?) என்பதுதான் அது. அவ் வேதத்துக்கு உதாத்தம், அனுதாத்தம் எனப்பட்ட சுரங்களின் வழுவாமல் ஓதல் வேண்டுமென்னும் விதியுளதாகலின் அதற்குத் தகுதியுடைய அந்தணரே அதை ஓதுதற்கு அதிகாரிகள் ஆயினுர். **அவ்வேதம் சொல்லின் கண்ணே தலைமை உடைத்தென்பதூஉம், இவ் வேதம் (திருக்குறள்) பொருளின் கண்ணே தலைமை உடைத்தென்பதூஉம் பெறப்பட்டன**' என்று சப்பைக் கட்டு கட்டுகிறுர்.

'ஓதப் படுதலில், அவ் வேதத்தினும், இது சிறப்புடைமை சொல்லியபடி' என்று வேறு வழியின்றி உண்மையை ஒப்புக்கொள்கிறுர் உரையாசிரியர்.

எனவே, 'சந்தைப் படிப்பு' என்று வள்ளற்பெருமானுல் இகழ்ந்துரைக்கப்பட்ட வேதங்களுடன் திருக்குறளை ஒப்பிடுதல் முறையன்று; ஒப்பிட நினைப்பது தவருகும், என்பதை நன்குணரலாம். உணரவே, திருக்குறளைப் புகழ்கிறேம் என்ற நினைப்பில் இதுவரை நாம் கூறிவந்த "உலகப் பொதுமறை" என்ற பெயரின் பொருந்தாமையை உணரலாம். ஆகவே, இனியேனும் **உலகப் பொதுமறை** என்ற பெயரால் திருக்குறளைக் குறிப்பிடாமல் இருக்க முயல்வோமாக.

"உலகப் பொதுநூல்" என்று குறிப்பிடுவதே சாலும். தென்மொழி மேல் பற்றுள்ளவர் எவரும் 'உலகப் பொதுமறை' என்று குறிப்பிடுவதால்—சிறுமை மிகுந்த வேதத்துடன் திருக்குறளை ஒப்பிடுவதால்—திருக்குறளுக்கு ஏற்படும் சிறுமையை உணர்ந்து, அவ்வாறு வழங்காமல் இருப்பார்களாக.

இனித், திருவள்ளுவமாலையில் உள்ள ஓர் அழகிய பாடலைக் குறிப்பிட விழைகிறேன்.

> தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
> பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
> வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனுர்
> வெள்ளைக் குறட்பா விரி.

சென்ற இதழ்த் தொடர்ச்சி தொடர்ச்சி-3

மலேசியத் தமிழர்

—முரசு. நெடுமாறன்

கல்வி உதவி வைப்புகள் :

உயர் கல்வி பெற விரும்பும் அனைத்து ஏழை மாணவர்களுக்கும் பொருள் உதவி கிடைக்க வாய்ப்பில்லை என்றாலும், தென்னிந்தியத் தொழிலாளர் வைப்பு, மலேசிய இந்தியர் பேராயத்தின் கல்வி வைப்பு, பர். இராம சுப்பையா கல்வி வைப்பு முதலியவற்றின் மூலமும் தேசிய நிலப் பொருள் கூட்டுறவுக் கழகம், அருள்மிகு பெருமாரியம்மன் கோயில் தேவநிலை தேசியத் தோட்டத் தொழிலாளர் கழகம் முதலியவை வழங்கும் கல்வி உதவிப் பொருள் மூலம் ஆண்டுதோறும் பல மாணவர்கள் உயர் கல்வி பெற்று வருகிறார்கள். உயர் கல்வி நிலையங்களில் தமிழ் மாணவர்களுக்கும் போதிய இடங்கள் தரப்படுவதில்லை என்ற மனக் குறை தொடர்ந்து இருந்து வருகிறது. இந்நிலை மாறக் குரல் எழுப்பி வருகிறது.

இலக்கிய வளர்ச்சி :

மலேசியாவில் தமிழ் இலக்கிய வளர்ச்சி நெடுங்காலத்திற்கு முன்பே அரும்பத் தொடங்கியது. 1880-க்கு முன்பே இங்கு நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இதுவரை ஏறக்குறைய ஐந்நூறு நூல்கள் வெளிவந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கு முன்பே இங்கு இலக்கியம் அரும்பத் தொடங்கியதென்றாலும் கடந்த கால் நூற்றாண்டுக்கால வளர்ச்சியே சிறப்பாகக் கொள்ளத்தக்கதாகும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

எவ்வளவு அழகாகப் பாடியுள்ளார் கபிலர். இப்பாட்டைப் படிக்கும் போதுதான் திடீரென்று என் மனத்தில் ஓர் எண்ணம் உண்டாயிற்று.

"சொல்லும் பொருள் வெளிப்படையாகத் தோன்றுதவாறும், சூழ்ச்சி மிகுந்த உட்பொருள் பொதிந்து இருக்குமாறும், மறைத்துச் சொல்லும் வேதங்களாகிய 'மறை'களைப் போலன்றி, அனைத்தையும் தெளிவாகச் சொல்லும் **திருக்குறள் அளவில் குறுகியது என்றாலும் பொருளில் விரிந்தது; எதனையும் விரித்து—மறைக்காமல் வெளிப்படுத்தி—உரைப்பது,"** என்னும் பொருள் தோன்றவே 'வெள்ளைக் குறட்பா விரி' என்று கபிலர் பாடியிருப்பார் போலும். ஆகவே, வேதங்களை 'மறை' என்பதுபோல் திருக்குறளை ஏன் 'விரி' என்று அழைக்கலாகாது? உலகப் பொது மறை என்பதற்கு மாறாக "உலகப் பொது விரி" என்று அழைத்தால் என்ன? எண்ணிப் பார்த்து முடிவு செய்வது அன்பர்கள் பொறுப்பு.

மலேசிய இலக்கிய வளர்ச்சிக்குத் தாளிகைகள் பேரளவு, துணை புரிந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பொன்விழா வைத் தாண்டி மணிவிழாவை நோக்கி நடைபோட்டுக் கொண் டிருக்கும் **தமிழ் நேசனு**ம் இடைவிடாது எழுச்சிக்கு முரசொலிக் கும் **தமிழ் முரசும்**, உலகிலேயே மாற்றச்சு (ஆஃப்செட்) வாய்ப் போடு வெளிவரும் ஒரே தமிழ் ஏடான **தமிழ் மலரு**ம், சில காலம் சீரான பணியாற்றி மறைந்த **மலைநாடும்**, மாலைப்பதிப்பாக வந்த **தேச தூதனும்** நாளிதழ்கள் என்றாலும் இலக்கிய வளர்ச்சிக்கு நடுவாக விளங்கின என்பதை இங்கு நன்றி உணர்வோடு குறிப்பிட வேண்டும். நாளிதழ்களில் **தமிழ் நேசனு**ம், **தமிழ் முரசும்** மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் நின்று நிலைக்கத்தக்க பணியாகும். மலேசியத் தமிழ் எழுத்தாளர் களுள் பெரும்பாலாரை உருவாக்கிய பெருமை இவற்றைச் சேரும்.

நாளிதழ்களோடு கிழமை, மாத இதழ்களும் இலக்கிய வளர்ச் சிக்குப் பணிசெய்துள்ளன. **மாதவி, பொன்னி, திருமுகம், நவரசம், மலைமகள், புதியசமுதாயம்** முதலிய இதழ்களின் பணிகளையும் உலகப் புகழ் பெற்ற தொழிற்சங்கத் தலைவரான பா். பி. பி. நாராயணன் அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்ட தே. தோ. தொ. கழகத்தால் தொழிலாளர்களின் குரலாகக் கிழமை இருமுறை வெளியிடப்படும் **சங்கமணி**யின் தொண்டு களையும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

இதழ் வெளியீட்டைப் பொறுத்த வரை இங்குத் தோன்றித் தோன்றி மறையும் நிலையே உள்ளது. இதற்குக் காரணம் அடிப் படையில்லாமல் உணர்ச்சி ஆர்வம் இவற்றை மட்டுமே முதலீடாகக் கொண்டு இதழ் தொடங்குவதும் சீரான மேலாண்மையின்மையுமே முதன்மையான காரணங்கள் என்று சொல்வது தவறாகாது. இலக்கிய வளர்ச்சியைத் தூண்ட ஒரு கிழமை இதழ் இல்லையே என்ற குறையைப் போக்க இப்போது '**வானமபாடி**'' என்ற இதழ் நல்ல அடிப்படையோடு தொடங்கப்பட்டுள்ளது என்பது நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. குழந்தைகளுக்கான இதழ் இல்லையே என்ற குறையைப் போக்க முன்பு **மாணவர் பூங்கா** என்ற இதழ் வெளிவந்தது. கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாகத் '**திருமகள்**' மாத இதழ் வெளிவருகிறது.

அரசு வெளியீடு :

மலேசிய அரசும் தொடக்கக் காலம் முதல் தமிழ் ஏடுகளை நிறைய வெளியிட்டு வருகின்றது. '**சனோபகாரி**' என்ற இதழ் நீண்ட நெடுங்காலம் நடைபோட்டது. பின் '**வெற்றி**', '**வளர்ச்சி**', என்று அதன் பெயர் மாறியது. இப்போது '**உதயம்**' என்ற பெயரில் '**கண்ணைக் கவரும்**' இதழ் ஒன்று கவர்ச்சியோடு வெளி

வந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களுக்குக் குளிர்ச்சி சேர்க்கிறது. மலேசிய அரசு வெளியீட்டுத் துறையில் பன்னெடுங் காலம் உழைத்து இயற்கையெய்தி விட்ட பெருமகன் திரு. **சி. வி. குப்புசாமி** அவர்களை இங்கு நன்றியோடு நினைவு கூர வேண்டும். மலேசியாவில் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் இன எழுச்சிக்கும் இவர் ஆற்றியுள்ள தொண்டுகள் என்றும் நினைக்கத் தக்கவை.

நூல் வெளியீடு :

மலேசியாவில் முறையான தமிழ் இலக்கிய வளர்ச்சி கால் நூற்றாண்டுக்கு முன்புதான் தொடங்கியதென்றாலும், கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில்தாம் எழுத்துகள் நூல்வடிவம் பெறத் தொடங்கின. இதழ்களில் காலையில் வெளிவந்து மாலையில் குப்பைத் தொட்டிகளில் விழும் நிலை மாறி நூலாக்க முயற்சிகள் அரும்பியுள்ள இன்றைய கால கட்டத்தை மலேசியத் தமிழ் இலக்கிய உலகின் பொற்காலம் எனலாம்.

தமிழ் எழுத்துத்துறை வளர்ச்சிக்குத் தொலைக்காட்சித் துறையில் வாய்ப்பில்லை. ஊதியம் ஏதுமின்றி எழுத்துகளை இதழ்களுக்குச் சொந்தச் செலவில் அனுப்பி, அதுவே தமிழ்ப்பணி என்று நிறைவுறும் எழுத்தாளர்களுக்கு வானொலி ஓரளவு ஊதியம் தந்து ஊக்கி வருகிறது. அரசு வெளியீடான **உதயமும்** நிறைவடையத் தக்க ஊதியத்தை எழுத்தாளர்களுக்கு வழங்குகிறது.

பன்னெடுங்காலம் ஊதியம் எதையும் எதிர்பார்க்காமல் எழுதிக் கொண்டிருந்த எழுத்தாளர்களுக்குத் தாளிகைகள் அவ்வப்போது சிறுசிறு அளவில் பரிசுகள் வழங்கின. தொடர்ந்து முறையான ஓர் ஊதியத் திட்டத்தை எந்த இதழும் மேற்கொள்ளவில்லை. மலேசியத் தமிழ் எழுத்தாளர் கழகம், மாதவரிசைச் சிறுகதைக் கருத்தரங்குகள் நடத்தித் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சிறு கதைக்கு ஐம்பது வெள்ளி பரிசளித்து வருகிறது.

மலேசிய இந்தியப் பேராயத்தின் இலக்கியப் பரிசுத் திட்டம் :

இப்போது மலேசிய இந்தியர்களைப் பேராளுகின்ற அரசியல் கட்சியான மலேசிய இந்தியர் பேராயம் மிகப் பெரிய அளவிலான பரிசுத் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. பண்பாட்டுப் பகுதியில் தலைவராக அண்மையில் பொறுப்பேற்றுள்ள திரு. வ. கோவிந்தராசு ஏ. எம். என்., பி. சே. கே. அவர்களின் அறிக்கையின்படி ஆண்டு தோறும் வெளிவரும் சிறந்த நூல் ஒன்றுக்கு ஆயிரம் வெள்ளியும், இரண்டாம் நிலை பெறும் நூலுக்கு ஐந்நூறு வெள்ளியும் அளிப்பதே அத்திட்டமாகும். இதுநாள்வரை மலேசியாவில் எந்த அமைப்பும் மேற்கொள்ளாத மாபெரும் திட்டம், எழுத்தாளர்களுக்குப் பேருக்கம்

தரும் இப்பரிசுத் திட்டம் தொடர்ந்து உறுதியாகச் செயல்பட வேண்டுமென்று இலக்கிய உலகம் ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறது.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் கழகம் :

மலேசியாவில் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது எழுத்தாளர் கழகம் பற்றிக் குறிப்பிட வேண்டுவது தேவையாகும். எழுத்தாளர்களை ஒன்று சேர்க்கவும், அவர்களின் இலக்கிய முயற்சிகளைத் தூண்டவும், கழகம் தொடக்கம் முதல் பாடுபட்டு வருகிறது. பல நூல்களையும் வெளியிட்டு வருகிறது. தேசிய மொழி எழுத்தாளர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு தந்து ஊக்குவதுபோல், தாய்மொழி எழுத்தாளர்களுக்குப் இலக்கியப் பரிசுகள் தர வேண்டுமென்று கழகம் வேண்டுகோள் விடுத்து வருகிறது. இப்பணியில் தமிழ் இலக்கியக் கழகம் மேற்கொள்ளும் முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை. தேசியமொழியான மலேசிய மொழியில் அமைவதே தேசிய இலக்கியம் ஆதலால், அம்மொழியில் எழுதப்படும் நூல்களையே பரிசுத் திட்டத்தில் சேர்க்க முடியும் என்ற நிலையுள்ளது. "தாய்மொழிகளில் எழுதப்படும் இலக்கியங்களும் தேசிய உணர்வு உடையவை. அவற்றிற்கும் பரிசு தரப்பட வேண்டு"மென்ற கோரிக்கை தொடர்ந்து எழுப்பப்பெற்று வருகிறது. எழுத்தாளர் கழகத்தை எண்ணும்போது காலஞ்சென்ற பெருமகன் திரு. **சி. வி. குப்புசாமி,** பாவலர் சி. **வேலுசாமி,** சிறுகதைச் செல்வர் திரு. **சி. வடிவேல்,** முத்தமிழ்ச் செல்வர் திரு. **முருகு சுப்பிரமணியன்** முதலியோர் ஆற்றிய பணிகள் நம் நினைவுக்கு வருகின்றன. இப்போது திரு **மு. துரைராசு** அவர்கள் தலைவராகவும் திரு. **பீர் முகமது** செயலாளராகவும் பொறுப்பெற்றுள்ளார்கள்.

செந்தமிழ்க் கலா நிலையம் :

தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது பினாங்கில் பல்கலைச் செல்வரான முதுதமிழ்ப் பெரும்புலவர் சுவாமி இராமதாசர் அவர்கள் தலைமையில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் செந்தமிழ்க் கலா நிலையத்தை மறந்துவிட முடியாது. தரமான புலவர் பலரை இந்நிலையம் உருவாக்கியுள்ளது.

வளர்ச்சி கண்டுள்ள இலக்கியத் துறைகள் :

மலேசியத் தமிழ் இலக்கியத் துறையில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க அளவு வளர்ந்துள்ள முறைகள் சிறுகதையும் பாடலும் ஆகும். புதினத்துறை வளர்கிறது என்றாலும் இன்னும் முழுவதும் வளர்ச்சி பெறவில்லை. கட்டுரைத்துறை மந்த நிலையிலேயே உள்ளது என்று தான் சொல்ல வேண்டும். சிறுவர் இலக்கியத்தைப் பொறுத்த வரை பாடல்துறை வளர்ச்சி கண்டுள்ளது. கதை, நாடகம், புதினத் துறைகள் நிறைவு கொள்ளத்தக்க அளவு வளர்ச்சி காணவில்லை

யென்றே சொல்லவேண்டும். நம் இலக்கிய வடிவங்கள் இப்போது தேசிய மொழியான மலேசிய மொழியிலும் வெளிவரத் தொடங்கியுள்ளன. நூற்றுக்கணக்கான கதைகளையும், பாடல்களையும் மொழிபெயர்த்துள்ள மலேசிய மொழிப் புலவர் திரு. சி. சூசை அவர்கள் திருக்குறளை மலேசிய மொழியில் பெயர்த்துள்ளார்.

கலை, பண்பாட்டுத்துறை :

மேலை நாட்டுப் பண்பும் கீழை நாட்டுப் பண்பும் கைகோத்து நடம்புரியும் பச்சைப் பசுங்கோயிலான பண்ணை மலேசியத் திருநாட்டில், கீழை நாட்டுப் பண்பே தலை நிமிர்ந்து அரசோச்சுகிறது. மலாய்க்காரர்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் நம் முறைக்கு அதிக வேறுபாடுகள் கொண்டவை அல்ல. ஆதலால், நம் 'பண்பாடு' ஒன்றிக்கட்டை நிலையில் ஒதுங்கித் தனிமைப்படவேண்டிய நிலையில்லை. புதிதாக வீசுகின்ற நாகரீகக் காற்று நம் பண்பாட்டை அழித்துவிடுமோ என்று அஞ்சத் தேவையில்லை. நம்முடைய மரபுநிலைப் பண்பாடுகள் உணர்வுகளோடு ஒன்றி ஒளிவிட்டே வருகின்றன. மலேசியாவில் இயங்கும் ஒவ்வொரு தமிழர் அமைப்பும் கலை, பண்பாட்டு வளர்ச்சியில் நாட்டம் கொண்டு உழைத்து வருகின்றன. கலையைப் பொறுத்தவரை இங்குப் பேரார்வம் கரைபுரண்ட நிலையில் இருக்கிறதென்றாலும், எப்படி இங்கு ஒருவர் எழுத்தையே தொழிலாகக் கொண்டு வாழ முடியாதோ அதேபோல் கலையைத் தொழிலாகக் கொண்டும் வாழ முடியாது. தொலைக்காட்சி வானொலித் துறையைச் சேர்ந்த கலைஞர்களும், நடன இசையாசிரியர்களும் விரல் விட்டு எண்ணத் தக்கவர்களே கலையைத் தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள். கலை நிகழ்ச்சிகள் இங்கு அடிக்கடி நடைபெற்றே வருகின்றன. தனிக் கருநாடக இசையரங்கு, தனிப் பரத நாட்டிய இசையரங்கு போன்ற ஆழமான கலைப் படைப்புகள் இங்கு நடப்பது அருமையாகவே உள்ளன. தமிழகத்திலிருந்து வரும் பெரும் கலைஞர்களின் படைப்புகள் இங்கு இடம் பெறுவதுண்டு. சிறந்த முழு நேர நாடகங்கள் அவ்வப்போது நடப்பதுண்டு. காலஞ்சென்ற நாடகத் தந்தை **ஆழி-அருள் தாசன்** அவர்கள் ஆண்டுக்கொரு புது நாடகம் என்ற முறையில் பல அரிய நாடகங்களை அரங்கேற்றிப் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளார். அவர் மறைவு மலேசியக் கலை உலகிற்குப் பேரிழப்பாகும். திரு. வ. கோவிந்தராசு அவர்கள் தலைமையில் உள்ள கோலாலம்பூர் வளரும் கலைஞர்கள் நாடக மன்றமும் '**1941**' போன்ற அரிய வரலாற்று நாடகங்களை நடத்தி வெற்றி கண்டுள்ளது. குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வேறு சில மன்றங்களும் அவ்வப்போது நாடகங்களை நடத்தி வருகின்றன.

இசை, நடனம் முதலிய கலைகளை முறையாகப் பயிற்றுவிக்கப் பெரிய அளவில் இங்கு நிலையங்கள் இல்லை. சிறு சிறு அளவில் ஆங்காங்கே சிலர் இத்துறைகளில் தொண்டாற்றி வருகிறார்கள்.

தேசியப் பண்பாடு :

பல இனத்தினர் வாழும் மலேசிய நாட்டில் இப்போது தேசியப் பண்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற விழைவு அரும்பி யுள்ளது. அதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவில் மலேசிய இந்தியர் பேராயத்தின் தேசியத் துணைத் தலைவர் மாண்புமிகு **ச. சாமிவேலு** அவர்களும், தமிழ் இளைஞர் மணி மன்றங்களின் தேசியப் பேரவைத் தலைவர் திரு. க. கிருட்டிணசாமி அவர்களும் இடம் பெற் றுள்ளனர். தேசியப் பண்பாடு உருவாக வேண்டுமென்ற வரை யறை இன்னும் ஏற்படவில்லை. காலமே இதற்கு ஒரு நல்ல வடிவை ஏற்படுத்த முடியும்.

வழிபாட்டுரிமை :

மலேசியாவில் வாழும் அனைவர்க்கும் வழிபாட்டுரிமை குறை வின்றி வழங்கப்பட்டுள்ளது தமிழர் பல சமயங்களைத் தழுவுபவர் களாக இருந்தாலும், 'இந்து' மதத்தைத் தழுவுவோரே மிக அதிகம். இங்கு இந்து சமய மன்றம் ஒன்று வலிமையோடு இயங்குகிறது. கோலாலம்பூர் அருள்மிகு பெரு மாரியம்மன் கோவில் தேவநிலையமும் சீரிய முறையில் சமயத் தொண்டாற்றுகின்றது. ஆண்டு தோறும் பத்து மலையில் தைப்பூச விழா மிகப் பெரிய அளவில் கொண்டாடப் பெறுகிறது. இந்த விழாவில் நாடெங்கிலுமிருந்து இலக்கக் கணக் கான தமிழர்கள் ஒரே நேரத்தில் ஒன்று கூடுவதைக் காணலாம். இங்கு ஒவ்வொரு சமய விழாவும் வேறுபாடுகள் இல்லாமல் தேசிய விழாவைப் போலவே நடைபெறும் சமய வேறுபாடுகளை யாரும் போற்றுவதில்லை. தமிழர் வாழும் ஊர் தோறும் கோயில்கள் உண்டு. கோயில் கட்ட அரசு நல்கை வழங்குகிறது.

மறைந்தும் மறையாத மாமணி :

மலேசியாவில் தமிழ், தமிழ் உணர்ச்சி, தமிழ் வளர்ச்சி, இலக்கிய எழுச்சி என்று எண்ணும்போது நம் நினைவில் எழும் பேருருவம் **தமிழவேள் கோ. சாரங்கபாணியார்** தமிழர்க்கு விழிப்பூட்டிப் பட்டி தொட்டியெங்கும் தமிழ் முழக்கம் செய்த அரிமாவான அவர் **தமிழ் முரசு** மூலம் ஆற்றிய பணிகள் வரலாற்றில் நின்று நிலைக்கத் தக்கவை. தமிழர் திருநாள் மூலம் அவர் ஏற்றிய தமிழ் உணர்வும், பண்பாட்டுணர்வும் தமிழர் தலை நிமிர, பல்கலைக் கழகத்தில் தமிழ் ஒலிக்க வழி வகைகள் செய்தனவென்றால் மிகை யாகாது.

தேசியக் கோட்பாடுகள் :

1. இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
2. பேரரசருக்கும் நாட்டுக்கும் உண்மையாய் இருத்தல்

மக்களவை

ம : 241: திருக்குறளை இழிவுபடுத்தியவரைப் பதவி நீக்கம் செய்க!

பெருமதிப்பிற்குமுரிய ஐயா, அவர்களுக்கு, வணக்கம். நலம். நலம் பெருகுக. 'தென்மொழி'யில் தாங்கள் எழுதியிருந்த **''திருக்குறளுக்கு நேர்ந்த அவமதிப்பும் இயக்குநர் அருணாசலத்தின் பணி விடுப்பும்''** எனும் கட்டுரையைப் படித்து மிகவும் கொதிப்படைந்தேன். தமிழ் வரலாற்றில் நமது காலத்திற்கு முன், ஆரியப் பார்ப்பனர்கள் செய்துவிட்ட சூழ்ச்சிகளை ஒருவாறு கண்டு வெளிப்படுத்தி வரும் இக்காலச் சூழலில், நம் கண்ணெதிரிலேயே நாம் கண்ணுகப் போற்றுகிற 'திருக்குறளையே' சாப்பிடுகிறவர்களைக் காணும்போது நான் திடுக்கிட்டுப் போனேன்! அவர்களின் கொட்டங்கள் அளவிறந்து பெருகிப் போய்விட்டன! இனியும் நாம் வாளாவிருப்பின் இன்னும் என்னென்ன நடக்குமோ?

(முன்பக்கத் தொடர்ச்சி)

3. அரசியல் அமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப் பிடித்தல்
4. சட்ட முறைப்படி ஆட்சி நடத்துதல்
5. நன்னடத்தையும் ஒழுக்கத்தையும் பேணுதல்.

இந்த ஐந்து கோட்பாடுகளே மலேசியத் திருநாட்டின் உயிர் மூச்சாகும். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஏற்றுக் கொண்ட இக் கொள்கைகளே நாட்டில் உரமூட்டுகின்றன; உறுதி ஏற்றுகின்றன; ஒளி வழங்குகின்றன. நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

நாட்டுப்பற்றும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒருமைப் பாட்டுணர்வும் நாட்டிற்காகத் தன்னையே ஒப்படைக்கத் தயங்காத ஈகை மனப்பான்மையும் கொண்டு நம்பிக்கைக்குரிய இனமாகத் தமிழ் இனம் மலேசியாவில் வாழ்கிறது. **உலகின் மற்ற எந்த நாட்டுத் தமிழர்களையும் விட மகிழ்ச்சியோடும் நலத் தோடும் வாழ்வோர் மலேசியத் தமிழர்களே என்று நெஞ்சு நிமிர்ந்து கூறுவேன்.**

''பச்சைப் பசுங்கோயில்—இன்பப் பண்ணை மலை நாடு'' என்று பாவலர்கள் வாழ்த்தும் மலேசியத்தை வாழ்த்தி நாட்டால் பிரிந் திருந்தாலும் நம்மையெல்லாம் ஓரரங்கில் கூட்டும் நற்றமிழை வாழ்த்தி, என் கட்டுரையை முடிக்கிறேன். (முற்றும்)

'தமிழ் சமசுக்கிருதம் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனம்' எனும் அமைப்பின் நெறிகளை யெல்லாம் மீறி நிறுவனத் தின் செலவில், அதுவும், திருக்குறளின் மதிப்புக்குக் குறைவுண்டு பண்ணும் செயலைச் செய்தவரைத் தட்டிக் கேட்க ஆள் இல்லையா? 'தமிழ்! தமிழ்!' என்று நாளெல்லாம் வாய் வலிக்கப் பேசுகிற எத்தனையோ தலைவர்கள் உலா வருகின்றனரே! அவர்களுக் கெல்லாம் திருக்குறளுக்கு நேர்ந்த மதிப்புக் குறைவைக் கண்டிக்க நேரமில்லையா? இந்த அறிவுகெட்ட தமிழினத்திற்கு உணர்வூட்டும் வகையில் பலவாறு போதுமான அளவு எழுதியாயிற்று; பேசி யாயிற்று; இனி ஏதேனும் இவ்விழிவினம் திருந்தும் வகையிலும் வருந்தும் வகையிலும் செய்யத் தொடங்கிவிட வேண்டும்! இனி, நாம், எவரையும் நம்பிக் காத்திருப்பதோ பயன் தராது! அவரவரும் தமக்காக வாழ்வது தம்மைக் காத்துக் கொள்வது என முடிவெடுத்து விட்டிருக்கின்றனர் போலும்! இந்நிலையில் இனி நம் முயற்சிகளைச் செய்து பார்த்து விட வேண்டியதுதான்!

— **க. தமிழமல்லன்**, செயலாளர், தனித்தமிழ்க்கழகம், புதுச்சேரி-9

ம : 242 : இந்தியின் வல்லாண்மை

பேரன்புகெழுமிய ஐயா அவர்கட்கு வணக்கம்! தமிழினத்தைக் கூண்டோடு அழிக்க, ஆரியத் தலைவர்களும் அடிவருடிகளும் கங்கணம் கட்டியுள்ளார்கள். அதனால்தான் ஒற்றுமையுடன் சென்ற விடமெல்லாம், தமிழர்களுக்கெதிராகவே பேசியும், போர்க்கொடி உயர்த்தியும் வருகிறார்கள். கழிந்த ஆண்டு வெளிநாடு சென்ற நம் தலைமை அமைச்சர் ஒன்றுபட்ட இலங்கையைத்தான் பார்க்க விரும்புவாராம். தமிழின் பெயரால் தனித்தமிழ் நாடு கேட்பதை அவர் அனுமதிக்க மாட்டாராம். இவ்வாறே அவருடைய வழித் தோன்றல்களான, அடல்பீகாரி வாசுபேயி, (உலகம் சுற்றும் அமைச்சர்), மோகன்தாரியா போன்றவர்கள் தமிழர்கள் தனி நாடு கேட்பதை விரும்ப மாட்டார்களாம்! இதைக் கருத்தில் கொண்டு தான், தமிழர்களுக்கெதிரான அனைத்து உதவிகளையும் செயவர்த்தனு வுக்குச் செய்து வருவது அனைவரும் அறிந்ததொன்றே!

இலங்கைச் செலவின் பின்னர்த் தாளிகைகளின் பார்வையாளர் களுக்கு அளித்த நேர்முகப் பேச்சில், நம் தலைமை அமைச்சர் நாட்டுப்பற்றுள்ள அனைவரும் இந்தியைப் படித்தே ஆகவேண்டும்! என்றார். என்றைக்காவது ஓர் நாள் மானங்கெட்ட தமிழர்கள் இந்தி படித்தே தீரவேண்டுமாம்! அவர்களொன்றும் இந்தியைத் திணிக்கவில்லையாம்! இந்தி! இந்தி! என்று தமிழர்கள் அன்றாடம் வறட்டுக்கத்தல் கத்துவது செத்த குதிரையை எழுப்புவது போன்றதாம்! எங்கு வந்து எப்படிப் பேசுவது என்றே நமது தலைமை அமைச்சருக்குத் தெரியவில்லை போலும்! என்ன மண்டைக்

கனம் பிடித்த, செருக்குப் பேச்சு! இந்திய மக்கள் தங்கள் அறியாமையினுல் அளித்த ஒப்போலேயின் பயனுகத் தலைமை இடத்தில் இருந்து கொண்டு, ஒரு பொறுப்புள்ள தலைமை அமைச்சர் பேச வேண்டிய பேச்சா இது! அவரைச் சொல்லி என்ன பயன்! இதுதான் அடிவருடித் தம்பிரான்களும், ஆரிய வைப்பாட்டியின் பிள்ளைகளும் காட்டிக் கொடுக்கும் கோமான்களும் நிறைந்த இடமாயிற்றே! என்ன நெஞ்சழுத்தம்! தேர்தலின்போது, சென்னையில் எப்படிப பட்ட சொல்லுறுதிகளை அள்ளி வீசினுர் என்பதை எண்ணுகையில், அவர் அப்போது சோறு தின்ற வாயால் சொல்லி இருக்கக் கூடும் என்றே நம்பத் தோன்றுகிறது!

இங்குள்ள கருங்காலிப் புல்லுருவிக்கூட்டங்கள், தமிழன்னையை வடநாட்டுக் குருடர்களுக்கு வைப்பாட்டியாக்கும், மானம் விற்ற மடையர்கள், விபீடண பிரகலாதன்கள் சிலர் கேட்கக்கூடும், எங்கே இந்தி என்று? ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்ருேடொன்று சேர்ந்து அரசியல் ஊதியம் தேடுகிருர்கள் என்றெல்லாம் இரவு பகலாக நச்சரித்து வருவது நாமறிந்ததே! வானெலிப் பெட்டியின் குமிழைத் திருப்பினுல் இந்தி! செய்தித் தாளைப் புரட்டினுல் இந்தி! தொலைக்காட்சியில் இந்தி! ஏன் பார்க்குமிடமெல்லாம் இந்திதான்! தமிழ்நாட்டில் உள்ள நடுவணரசுத் துறைகளில் எல்லாம் இந்தி மயமாக்கப்பட்டு விட்டது. இந்தித் திணிப்பில்லையாம்! தமிழக அரசின் ஆளுமையில் இந்தியைத் திணித்தால்தான் அது திணிப்பாம்! இந்திய இருப்பு வழித்துறை, அஞ்சல் துறை, தொலைவரி, தொலைபேசி, செய்திப் போக்குவரத்து வைப்பகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாழ்நாள் காப்புக் கழகங்கள், தொழிற்சாலைகள் இவற்றில் எல்லாம் திணிக்கப்பட்டால் திணிப்பாகாதாம்! இதென்ன கோமாளித்தனமான பேச்சாக இருக்கிறது. தமிழ்நாட்டில் இருந்து நாற்பதாயிரம் பார்ப்பனக் குஞ்சுகுளுவான்கள் இந்தி படிக்கிருர்களாம்! அது மட்டுமா? பல்லாயிரம் பேர் வடமொழி கற்கிருர்களாம்! வடமொழிக்கென்று பல கோடி உருபா தமிழர் வரிப்பணத்தைப் பாழ்செய்து மதுராந்தகத்தில் வடமொழிப்பல்கலைக் கழகத்தைக் கட்டி வருகிருர்கள். பார்ப்பனன் ஒருவனை முதல்வராகக் கொண்டு செயல்படப் போகிறதாம்! இதுபோன்ற கொடிய அவலநிலை தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கிலும் காணவியலுமா? இனி எஞ்சி இருப்பது என்ன? வடவர்கள் திட்டமிட்டபடி எல்லாவற்றையும் இங்குள்ள பார்ப்பனக் குள்ளநரிகளின் துணைக் கொண்டு செவ்வனே செய்து முடித்து விட்டார்கள். இனி முகலாய மன்னன் அவுரங்கசீப் செய்ததுபோல், ஒரு கையில் கத்தியையும் மற்ருெரு கையில் இந்தியையும் (வடமொழி இந்து மதமும் இதனுள் அடக்கமாம் என்க) வைத்துக் கொண்டு, இன்று புதுதில்லி வரை வால்பிடிக்கும் அடிவருடிக் கயவர் கூட்டத்தை வரிசையாக நிற்கவைத்து இந்தி

வேண்டுமா (அ) தலையை உருட்டட்டுமா? என்று கேட்கும் காலம் வெகுதொலைவில் இல்லை. இன்னும் என்னென்ன இழிநிலைகளுக் கெல்லாம் ஆளாக்கப் போகிறார்கள் என்பதைச் சில கழிசடைக் குப்பைத் தொட்டிகள் பார்க்கத்தான் போகின்றன! இவற்றுக் கெல்லாம் அண்மைக்கால நிகழ்ச்சிகளே கரணியமாகும் வானொலி யில் தமிழைப் புறக்கணித்து, இந்தியில் எல்லாமும் செய்கிறார்கள். ஆரிய, ஐய்யப்பக் கூத்தடிப்புகள், ஏன் தொலைக்காட்சியில் பந்து விளையாட்டுப் போட்டியின் நிகழ்ச்சிகளை இந்தியில்தான் வண்ணனை செய்தார்கள். நம் இன மொழித்தாழ்விற்கு இது ஒன்றே போதாதா? வடஇந்திய அரசியல் எத்தர்கள் நன்குதான் செயல்பட்டு வருகிறார்கள். ஆனால் இங்குள்ள "**முகமதுபின் துக்ளக்குகள்**" தமிழ் மக்களை வாழவும் சாகவும் விடப்போவதில்லை என்பது மட்டும் உறுதி! மானமுள்ள அனைவரும் முழக்கயிற்றில் தொங்கவேண்டும்! அல்லது இன்றே முயன்று ஆரியத்தை அழித்தொழித்தல் வேண்டும்! இதுதான் முடிவு. எனவே தமிழர் தமிழர் என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழக அரசியல் எத்தர்களே! இனியும் தமிழர்களை அறியாமையில் வீழ்த்த வேண்டாம்.

—**மு. செகந்நாதன்**, க. இ. திருவண்ணாமலை.

ம: 243: அரசு அலுவலகங்களில் தமிழ்ப் படிவங்களையே கேளுங்கள்!

தென்மொழி ஆசிரியர் அவர்கட்கு, ஐயா, எல்லா மாநில, நடுவணரசு அலுவலகங்களிலும் தமிழே ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டும் என்ற குறிக்கோளுக்காக அரசியல்காரர் களையும் மற்றவர்களையும் நம்பிக் கொண்டிருப்பதை விட, மக்கள்— குறிப்பாகத் தமிழ்ப் பற்றுடையோர் தாங்களாகவே சில முயற்சிகள் எடுத்தல் மிக்க பயன்தரத்தக்கது என்பதற்குக் கீழ்வரும் நிகழ்ச்சி யைத் தருகின்றேன்.

ஒரு நடுவணரசு அலுவலகத்தில் சென்று எனக்கு வேண்டிய படிவம் ஒன்றினைக் கேட்டபோது, தமிழகத்தில், தமிழர்களால் தமிழர்களுக்காக நடத்தப் பெறுகின்ற அலுவலகத்தில் தமிழ் அல்லாத இரு மொழிகள்(!) (ஆங்கிலம்- இந்தி) அச்சிட்ட படிவத் தைக் கொடுத்தார்கள். தமிழ்ப்படிவம் கேட்டதற்கு இல்லையென்று கூறிவிட்டார்கள். பிறகு அவர்கள் கூறிய எந்தவோர் அமைதிப் படுத்தலையும் பொருட்படுத்தாது குற்றச்சாட்டுகளும்—கருத்துகளும் (புகார்—யோசனை) என்ற பொத்தகத்தில், இந்த இழிநிலையைச் குறித்து எழுதி, தமிழ்ப் படிவங்கள் வேண்டும என்று எழுதி வைத்தேன். அதற்கு அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் போலும். சில கிழமைகள் கழித்து மீண்டும் அங்குச்

சென்றபொழுது நான் கேட்ட தமிழ்ப் படிவங்கள் கிடைக்கப் பெற்று மிக்க மகிழ்வடைந்தேன்.

இந்நடைமுறையை ஒவ்வொரு தமிழ் மகனும் ஏன் கடைப் பிடிக்கக் கூடாது? இதுபற்றிச் செய்தித்தாள்களிலும் இதழ்களிலும் விளம்பரங்கள் செய்தால் கூட மிக்க பயன் கிடைக்கும் என்று நினைக்கின்றேன். விளம்பரத்தின் மாதிரியையும் கீழே தருகின்றேன்.

தமிழா! இன்னுமா தூக்கம்?

நீ செல்லுகின்ற அரசு அலுவலகங்களிலெல்லாம் தமிழில் அச்சடித்த படிவங்களையே வற்புறுத்திக் கேள். தமிழிலேயே எழுதிக் கொடு. தமிழ்ப் படிவங்கள் கிடைக்காவிட்டால் "குற்றச்சாட்டு களும் — கருத்துகளும்" என்ற பொத்தகத்தில் தவறாது எழுதி வைப்பாயாக, தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி பெறும் வரை ஓயாதே.

இதுபற்றித் தென்மொழியில் வெளியிட்டுப் பின் விளம்பரமும் செய்ய வேண்டுகோள் விடுத்தீர்களானால் என்னால் முடிந்த பொருளுதவி செய்வேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

—**தமிழ்வளவன்**, இடையன்காட்டுவலசு, ஈரோடு-9.

ம : 244 : சிலை வைப்பு ஆரவாரங்கள்

பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். இன்று சிலைகள் வைத்துக் கல்லறை எழுப்பி, மாலை அணிவித்துத் தமிழகத்தின் தெருக்களில் நிறுத்தப்பட்டிருக்கும் சில தலைவர்கள் சிலைவைப்புப் பற்றி நினைத்தாலே நெஞ்சு வெடிக்கிறது; கரணியம் அத்தகைய வர்கள் உண்மையிலேயே தமிழகத்திற்குக் கேட்டினையே மிகுதி யாகச் செய்துள்ளனர். அத்தகையவர்களால் ஊதியம் அடைந்த வர்கள் வேண்டுமானால் வரிந்து கட்டிக்கொண்டு பீற்றித் திரியலாம்; மெய்யாகவே இன்றைய குமுக நிலையின் பலபடிகளில் இருந்து பட்ட துன்பம் காட்டும் பட்டறிவின்படி கூறுவோமேயாகில் பழைய முதலாளிய கட்டுகளைச் சீர்திருத்தம், மாற்றம், புதுமை, உரிமை என்னும் நிறங்களைப் பூசி அக்கட்டுகளை வலிவாக்கி அதன் கூந்தலறத்தை ஆல்போல் தழைக்க வைத்து விட்டுச் சென் றுள்ளனர்.

காலப்போக்கில் அதன் வழிவந்தவர்களைக் குமுகாயம் புறக் கணித்தே தீரும். நடைமுறைச் சிக்கல்களை உடனுக்குடன் தீர்க் காது சாய்கால்களின் வழியே செல்லும் போக்கு தனி மாந்த னிடத்தும் படிப்படியாக வெறுப்பினையே வளர்க்கும்; பின்னர் அவ் வெறுப்பு காழ்ப்புணர்வாக மாறும். 'மாந்தனை மாந்தன் வெறுத் தால் வேறு எப்பகையும் இத்தரையில் தேவையில்லை!" "ஒருவன்

தாய்மொழியை இன்னொருவன் கலப்புச் செய்து அழித்தால் ஒருவன் உரிமையை மற்றொருவன் பறித்தால், ஒருவன் உழைப்பை இன்னொருவன் சுரண்டினால், அதற்குப் பெயர்தான் கொடுமை!'' இக்கொடுமைகளை இன்றுவரை எவ்வரசியல் தலைவரும், குமுகாயத் தலைவரும் முயன்று போக்கவில்லை; போக்குவதாய் நடித்து ஒப்போலைகளைப் பெற்று, பதவியேற்று, மக்களைப் பாராதிருந்து வீணே வாழ்ந்து, விளம்பரம் செய்து கொண்டு மடிந்தனர்! மடிகின்றனர்!! இனியும்மடிவர்!!! ஏ! தாழ்ந்த தமிழகமே!! இனி அப்படிப்பட்டவர்களை இனங் கண்டு கொண்டு, உனக்கென ஓயாது உழைக்க அணியமாகவுள்ள அப்பழுக்கற்ற தூய தமிழ் உள்ளங்களை எத்துறையைச் சேர்ந்தவையாக இருந்தாலும் எடுத்துப் பேணிப் பயனடைக! வாளாக இனியும் நீ பகட்டில் மூழ்கிவிட்டால் இந்நூற்றுண்டோடு உன் வரலாறு உலகவரங்கில் முற்றுப் பெற்று விடும்! தமிழா! விழி! உன் அறியாமை இருள் விலகட்டும்!

—**துலங்கொளி**, வேங்கைவாடி.

பாவலரேறு பெருஞ்சித்திரனாருக்குப் பாராட்டு

(13-9-78 அன்று கோபிபாளையம், தூய திரேசாள் முதனிலைப் பள்ளியில் முன்னுள் மாணவர் மன்ற நிகழ்ச்சியில் பாடிய பாடல்களுள் சில.)

தண்டமிழ் தழைக்கவெனத் தனித்தியங்கும் தண்மதியே
தனித்தமிழ் இருக்கவெனத் தன்மூச்சாய்க் கொண்டவரே!
தமிழ்மண்ணில் தமிழாய்ந்து தமிழோச்சி வந்தவரே,
தங்குபுகழ்த் தமிழினத்தைத் தன்பாவால் ஈர்த்தவரே!

தன்வாழ்வில் இடர்கள்பல சூழும்நிலை வந்திடினும்,
தன்னெஞ்சு தளராது எதிர்நின்று சூளுரைப்பீர்!
தமிழ்காக்கத் துணிவுடனே சிறைசென்ற பாவலரே,
தன்மானம் காக்கவென்று சீறிவந்த காவலரே!

ஆழ்ந்தகன்ற புலமையொடும் அறவழியிற் சிந்தனையும்
அருளுடைய நெஞ்சமுமாய் ஆன்றமைந்த நற்புகழும்
அறியாமை இருளகற்றும் அறிவொளியும் ஈங்குவைத்தீர்,
அன்புவழி தான்நடந்தே அருள்வெள்ளம் தந்துநின்றீர்!

பாவேந்தர் வழிவந்த பைந்தமிழின் பாவலரே,
பார்புகழ நுமதுபணி திக்கெட்டும் பரவிடுமே!
பாடிவைத்தேன் என்நாவால் நினதுபுகழ் சிறக்கவென,
பைந்தமிழும் உள்ளவரை நின்பெருமை மறையாதே!

கோ. அ. நாகவேலு, உடற்பயிற்சி ஆசிரியர், பாளையம்)

தன்னே ரிலாத தமிழ்!

க. அ. ஒளியவன் (பிரகாசம்) கொடுமுடி.

அறம்பொருள் இன்பம் அருங்கலைகள் யாவும்
திறம்படவே பெற்றுத் திகழும்—சிறப்புடனே
என்னே மொழியென்றே எல்லாரும் போற்றுகின்ற
தன்னே ரிலாத தமிழ்! 1

அனைத்துத் துறைக்கும் அடித்தளமாய் வாய்ந்து
எனைத்துத் தகுதியும் எய்தி—முனைப்பாக
முன்னே வைத் தெண்ணும் முழுமுதற் பேரிறையாம்
தன்னே ரிலாத தமிழ்! 2

ஏராள மாக இலங்கும் பெரும்பேற்றைத்
தாராள மாகத் தருகின்ற—பாராளும்
அன்னை மொழியாம் அருமை உயிர்காக்கும்
தன்னே ரிலாத தமிழ்! 3

தமிழின் சுவையைத் தகுதியிலார் தேரார்
அமிழ்தெனினும் அன்னார் அறியார்—நமதுதமிழ்
அன்னாரைக் கண்டே அருப்பவில்லை; அஃதென்றும்
தன்னே ரிலாத தமிழ்! 4

அழிந்தாலும் வையம், அழியாமல் தூய்மை
பொழிந்திலங்கும் இன்பத் தமிழே!—வழிந்திட்ட
இன்னல் இழப்பால் இறவாது வாழ்ந்திருக்கும்
தன்னே ரிலாத தமிழ்! 5

மாவேந்தர் பாராட்ட மூவேந்தர் சீராட்டப்
பாவேந்தர் தாலாட்டப் பாரினிலே—சாவேந்தா
மின்னே ரனைய மிகுசிறப்பாம் நம்முடைய
தன்னே ரிலாத தமிழ்! 6

எளிமை இனிமை இளமை வளமை
ஒளிமை தனிமை ஒருமை—அளிக்கின்ற
மன்னும் புகழ்வாய்ந்த மாண்பொருளாம் நம்முடைய
தன்னே ரிலாத தமிழ்! 7

உண்மை அகவை உரைப்பார் எவருள்ளார்
எண்ணுங்கள் என்றும் பதினாறே—என்றென்றும்
குன்றாச் சிறப்போடு கோலோச்சு கின்றநம்
தன்னே ரிலாத தமிழ்! 8

மற்றவர்க ளெல்லாரும் மாவிலங்கு போலலையக்
கற்றவர்க ளாகிக் கடைத்தேற்றி—உற்றவராய்
முன்னேற்றி வைத்ததுவாம் மூதாதை யர்தம்மைத்
தன்னே ரிலாத தமிழ்! 9

மொழிகள் அனைத்துக்கும் மூத்தே முதன்மை
விழியாய் முழுமுதலாய் மாண்பாய் - அழியாத
விண்ணாய் விளங்கொளியாய் வேரூன்றி வாழ்வதுவாம்
தன்னே ரிலாத தமிழ்! 10

படமுடியாத துன்பமெலாம் பட்டாலும் பாரில்
கடல்கொண்டு போனாலும் காப்பாய் — அடல்கொண்டே
என்றென்றும் குன்றாமல் ஏற்றமுடன் வாழ்ந்திருக்கும்
தன்னே ரிலாத தமிழ்! 11

எத்தகைய கேடுகள்வந் தெய்திடினும் சோராமல்
அத்தனையும் தாங்கி அமைதியுடன் — இத்தரையில்
மின்னே யெனச்சிறந்து மேன்மேல் மிளிர்ந்துவரும்
தன்னே ரிலாத தமிழ்! 12

எம்மொழியைத் தாய்மொழியாய் ஏற்றவரும் இவ்வுலகில்
நம்மொழியாய் வாய்ந்தவுயர் நற்றமிழை—தம்முடைய
அன்னை மொழியாக அவாவுற வைக்கின்ற
தன்னே ரிலாத தமிழ்! 13

வெளிவந்து விட்டது! விற்பனைக்குக் கிடைக்கிறது!

பெருஞ்சித்திரனார் பாடல்கள் - கனிச்சாறு

அரிய பாடற்களஞ்சியம்

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச் செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்தனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளில் ஏறத்தாழ 1800 வரிகள் கொண்ட ஆயிரக் கணக்கான பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப் பெற்று வந்த மூன்று தொகுதிகள்.

தீங்கனிச்சாறு! செந்தமிழ்த் தேறு!

என்றென்றும வைத்துப் போற்றவேண்டிய
இலக்கியப் பாச்சுரங்கம்!

முதல் தொகுதி உரு. 15—00
2-ஆம் தொகுதி ,, 11—00
3-ஆம் தொகுதி ,, 17—00

பதிவஞ்சற் செலவுடன் மூன்று நூல்களையும் நூலஞ்சலில்
விடுக்க: உரு. 47—50

10 படிகள் வாங்குபவர்களுக்குக் கழிவு 10 விழுக்காடு
தென்மொழி, சென்னை-5.

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

புதிர்க் கதிர்களை மிகுந்த நேரம் உடலில் படும்படி வைத்திருந்தால் அலித்தன்மை உண்டாகலாம். இக்கதிர்கள் மிகுந்த நேரம் உடலில் படுவது, புதிர்க் கதிர்கள் மூலம் மருத்துவம் நடக்கும் பொழுதோ, அல்லது அந்த இயந்திரங்களை இயக்கும் பொழுதோ ஏற்படலாம். தகுந்த தடுப்பு முறைகள் கையாளப்படின் இப்பிழை ஏற்படாது. இக்கதிர்களால் ஆண்மை அழிவதோடல்லாமல், மலட்டுத் தன்மையும் ஏற்படுகிறது.

ஓர் ஆணுக்குத் திடீரென உடல் பருத்தால், அலித்தன்மை உண்டாகலாம். வேண்டாத சதை கரைக்கப்பட்ட பின் ஆண்மை திரும்பி வந்து விடுகிறது.

மிகுந்த நேரம் குதிரை ஏற்றத்தாலோ, மிதிவண்டி விடுவதாலோ 'புராசுடேட்' சுரப்பியில் அழற்சியும், சிறுநீர்ப்புற வழியின் பின் பகுதியில் குருதித் தேக்கமும் ஏற்படுகின்றன. அதனால் அலித்தன்மை உண்டாக்கப்படலாம். முன்பே அலித்தன்மை குறைந்த அளவில் தென்பட்டால், இப்பொழுது பெரும் அளவில் தென்படும். ஆனால் இவற்றால் மட்டுமே அலித்தன்மை ஏற்படுமா என்பது ஐயத்திற்கு இடமானதே.

விடாது தொடர்ந்து முழு மூச்சுடன் அஃதாவது இயல்பாகச் செய்யும் வேலைக்கு மிகமிக மிகுதியாக மூளையைச் செலுத்தி வேலை செய்யும் ஆராய்ச்சியாளர்கள் ஆண்மையைப் பற்றி கவலைப்படுவதில்லை. இவர்கள் புணர்ச்சியை விரும்புவது இல்லை. மெய்ப்பொருள் அறிஞர்கள், அறிவியலறிஞர்கள், கணக்கு மேதைகள் போன்றோர்களுக்குப் பால் உணர்ச்சியே எழுவதில்லை. நம் காலத்திற்கு முன்னும், இக்காலத்திலும், வாழ்க்கையில் ஒருமுறை கூட புணர்ச்சியே செய்யாத, அல்லது அந்த உணர்ச்சியே எழாத மேதைகளைப் பற்றி கேள்விப்பட்டுள்ளோம். பார்த்தும் உள்ளோம். வடமொழிக் கடலை நிலை கண்டு உணர்ந்த சிவஞான முனிகளும், மணமுடித்தும் துறவியாய் வாழ்ந்த இராமலிங்க அடிகளையும், சிவனை நேருக்கு நேர் பார்த்துப் பேசிப் பழகி, 81 அகவை வரை வாழ்ந்த திருநாவுக்கரசரையும் அறியாதார் யாரே. மூளைக்கு மிகுந்த வேலை கொடுக்கும் பொழுது, நரம்பு மண்டலமும் மிகுந்த வேலை செய்ய வேண்டி இருக்கிறது. உடல் உழைப்பு மிக மிக நரம்பு மண்டலம் மிகுதியாக வேலை செய்து களைத்துப் போவதால், பால் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய

நரம்புகள் வேலை செய்ய வலு அற்றனவாக இருக்கின்றன. இந்நிலையிலேயே அவர்களுக்குப் பால் உணர்ச்சி ஏற்படுவதில்லை.

பால் இன்பம் நுகரும் பொழுது அஃதாவது புணர்ச்சியில் சரியான வழியைக் கடைப்பிடிக்காவிடின் அலித்தன்மை உண்டாகலாம். கரு உண்டாகாமல் இருப்பதற்காகப் புணர்ச்சியின்பொழுது, கருநீர் ஆண்குறியில் இருந்து வெளிவரும் நேரம் பார்த்து, ஆண் குறியைப் பெண் குறியிலிருந்து எடுத்துவிடுவார்கள். இதனுல் ஒளிநீர் பெண் குறியில் விழுவதில்லை. இதைத் "தடைப் புணர்ச்சி" எனப் பெயரிடலாம். இத் தடைப்புணர்ச்சியால் அலித்தன்மை ஏற்படலாம். பால் உணர்ச்சி நல்ல நிலையில் இருக்க வேண்டுமானுல், ஆணும் பெண்ணும் முழுமையாக இன்பம் துய்க்க வேண்டும். புணர்ச்சியின் இடையில் தடை உண்டாக்குவது பலகாலமாக நடந்து வருமானுல், உறுதியாகப் பால் பற்றிய கோளாறுகள் வந்தே தீரும். முடிவில் அலித்தன்மை வந்தடையும். இதில் எவ்வகை ஐயமும் கிடையாது. தடைப்புணர்ச்சி நரம்பு மண்டலத்திற்கு ஓர் அதிர்ச்சியைத் தருவதோடு மட்டுமல்லாமல், நரம்பு மண்டலத்தைத் தன்னிலையிலிருந்து தடுமாறச் செய்கிறது. அத்துடன், கலவி உறுப்புகளையும், இயற்கைக்கு மாருக, அழுத்தத்தைக் குறைக்காது, வீங்கிய நிலையிலேயே இருக்கச் செய்கிறது. இவ்வாறு தொடர்ந்து இந்த நிலையே நீடிக்கப்படின், விறைப்பற்ற எழுச்சியும், விரைவு விந்து வெளியேற்றமும் சில நாட்களில்உண்டாகின்றன. இதனுல் மனச் சலிப்பும் நரம்புத் தளர்ச்சியும் ஏற்படுகின்றன. கருத்தரியாதிருக்கச் செய்ய, புணர்ச்சியில் முழு இன்பத்தையும் துய்க்கக்கூடிய, வேறு வழிகளைக் கைக்கொள்வதே சாலச் சிறந்ததாம்.

புணர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு இருந்தாலும் அலித்தன்மை உண்டாகலாம். எந்த உறுப்பையும் மிகுந்த வேலை வாங்கினுல் அந்த உறுப்பு களைத்துப் போகிறது. இந்நிலையே சிலகாலம் நீடிக்குமாயின், அந்த உறுப்பு மிக அலுத்து, வேலை செய்யத் தகுதியற்றதாக ஆகிறது. இந்நிலையால் ஏற்படும் அலித்தன்மை தற்காலிகமானதுதான். முழு ஓய்வாலும், வலுப் பெறும் வரை புணர்ச்சியை நீக்குவதாலும், உடல் வளர்ச்சி பெறுவதற்கேற்ற உணவுப் பொருள்களை உட்கொள்வதாலும், இந்த அலித்தன்மை நீங்கும். இந்த மிக்க அலுப்பு, வளரும் இளைஞர்களுக்கு அஃதாவது கலவி உறுப்புகள் முழு வளர்ச்சி நிலையை எட்டாது, முழு வளர்ச்சியை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் காலத்தில் ஏற்பட்டால், இந்த அலுப்பால் விளையும் கேடு மாற்ற முடியாததாக இருக்கலாம். அதனுல் அந்த இளைஞன் வாழ்க்கை முழுவதும், அலித்தன்மை உடையவனுகவே வாழ வேண்டி வரும். இங்கு அந்த இளைஞனுடைய அகவை முதல் இடத்தைப் பெறுகின்றது.

முழுக்க முழுக்க பால் உணர்ச்சியையே உதறித் தள்ளி, புணர்ச்சி என்ற பேச்சே அற்று இருப்பினும், அலித்தன்மை உண்டாகலாம். தனக்குத்தானே இன்பம் துய்க்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. இதைக் ' கை இன்பம்'' எனப் பெயரிடலாம். கை இன்பத்தால், தீமை உண்டா இல்லையா என்பது பெருத்த சொற்போருக்கு உரியது. சிலர் தீதென்பர். சிலர் எவ்வகைத் தீங்குமில்லை எனக் கூறுவர். ஆனல் அப்பழக்கம், மிகுந்த அளவில் கைக்கொள்ளப் படுமாயின், உடல் நிலையைக் கெடுக்கின்றது. மணமாகாத ஆண் ஒரு குறிப்பிட்ட அளவு வரை, அஃதாவது இரண்டு அல்லது மூன்று கிழமைகளுக்கு ஒருமுறை இப்பழக்கத்தைக் கைக்கொளின் எவ்வகைக் கெடுதலும் இல்லை. இரண்டு அல்லது மூன்று கிழமைகளுக்குள் ஒளிநீர்ப்பை நிரம்புகிறது. நிரம்பிய ஒளிநீர்ப் பையை வெறுமை செய்யாவிடின், ஒருவகை தாங்க முடியாத அழுத்தம் ஏற்படுகிறது. இந்த ஒளிநீர் தூக்கத்தில் கனவின் மூலம் வெளியேற்றப்படலாம். அப்படி வெளியேற்றப்படா விட்டால் கை இன்பத்தின் மூலம் வெளியேற்றுவது தீங்கு விளைவிக்காது. இச்செய்கையால் அலித்தன்மையும் உண்டாகாது. மாருக வேலையற்றுக் கிடக்கும் கலவி உறுப்புகள் நசித்துப் போகா வண்ணம் காக்கப் படுகின்றன. மேலே விளக்கியது, மணமாகாத, ஒழுங்கான, இயல்பான ஆணுக்கே யன்றி மற்றவர்களுக்கன்று.

ஒவ்வொரு நாளுமோ, ஒரு நாளில் பலமுறைகளோ கை இன்பம் நுகர்ந்தால், அந்தோ! அவர்களின் நிலைமை விளக்கவே மனம் கூசுகின்றது. அவர்களுக்கு அலித்தன்மை வந்தே தீரும். ஆண்குறியின் எழும்பும் தன்மை தாக்கப்படுகிறது.

மேலே காட்டப்பட்ட காரணங்களால் ஏற்படும் அலித்தன்மையைப் போக்க, அலித்தன்மையை உண்டாக்கும் காரணங்களை நீக்கி, கோளாருன காலத்தில் ஏற்பட்ட தேய்வுகளைச் சரி செய்து விட்டால், இழந்த ஆண்மையை மீண்டும் பெறலாம்.

இனி, தொடக்க அலித்தன்மையை அதாவது **மனத்தால் ஏற்படும் அலித்தன்மை**யைப் பற்றிச் சிறிது விளக்குவோம்.

கமகம என நறுமணம் கமழும் தனி அறை. இரவு நேரம். மங்கியதோர் நிலவு. அகவை பதினறிருக்கும் இளம் பருவ மங்கை. பொங்கி வரும் பெரு நிலவு போன்ற ஒளி முகம், புன்னகையின் புது நிலவும் போற்றவருந் தோற்றம், துங்கமணி மின் போலும் வடிவத்தாள். கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ! பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல் சுமந்து விற்குவளை பவள மலர் மதிபூத்த விரைக்கொடியோ? ஓவியம் நான்முகன் எழுத ஒண்ணுமை உள்ளத்தால் மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ எனக் கூறத்தக்க மன

மொத்த மனைவி பக்கத்தில் உள்ளாள். இவரோ, முருகனோ, பெரு கொளியால் தன் நேரில் மாறனோ, தார்மார்பின் விஞ்சையனோ எனக் கூறத்தக்க அழகுடையவர். இவருக்கு எவ்வகை நோயோ, நொடியோ கிடையாது. இவருடைய கலவி உறுப்புகள் இயல்பாக எவ்வாறு இருக்கவேண்டுமோ அந்த அளவில் சிறிதுகூடப் பிறழாமல் அமைந்துள்ளன. இவ்வளவு இருந்தும், தன் அழகு மனைவியுடன் புணர்ச்சி செய்ய இயலாதவராக இருக்கிறார். இது மன அலித்தன்மை எனப்படும் என்பதை முன்பே பார்த்தோம். குறை அவர் மனத்தில் இருக்கின்றதே தவிர, கலவி உறுப்புகளிலோ, உடல் வேலைகளிலோ சுற்றுப்புறத்திலோ இல்லை

மன அலித்தன்மை உலகில் எந்த அளவில் பரவி உள்ளது என்பது பற்றிப் பலர் பலவகை நோக்கங்கள் தெரிவிக்கின்றனர். ஒரு சாரார் உறுப்பு அலித்தன்மையை விட மன அலித்தன்மையே பெரும்பான்மையாகக் காணக் கிடக்கின்றது என்பர். மற்றொரு சாராரோ உறுப்பு அலித்தன்மையே பெரும்பான்மையாக ஏற்படக் கூடியது. மன அலித்தன்மை, எளிதாகத் தள்ளக்கூடிய மிகச் சிறுபான்மையாகக் காணக் கிடப்பது எனக் கொள்கின்றனர்.

மன அலித்தன்மைக்குக் காரணங்களை அறிதல் மிகக் கடினம். ஏன் எனில் அக்காரணங்கள் உறுதியற்ற மனத்தை நிலைக்களனாக உடையன. அவற்றிற்கேற்ற சூழ்நிலையில் நன்கு செழித்து வளர் கின்றன.

மன அலித்தன்மை, நம் தலைமுறை, மக்கள் தொகுதிக்கு அளித்த மிக வியப்பான படைப்பாகும். இந்த மன அலித்தன்மை நம் தலைமுறையின் வீண் நிலையை விளக்கிக் காட்டும் ஒரு குறி யீடாகும். இத்தன்மை மிகுந்த அளவில் காணப்படுகிறது. இது நம் தலைமுறையின் கலப்பற்ற தனிச் சரக்காகும். ஒருவன் கெட்ட நடத்தை உள்ளவனாக இருக்கிறான் என்பதாக வைத்துக்கொள்வோம். அந்தக் குறிப்பிட்ட ஒருவன் மட்டும் கெட்டுவிட்டதாகப் பிறர் பேசுவதில்லை. உலகமே கெட்டுவிட்டது. நாகரீகமே பாழாய் விட்டது எனக் கூறுகின்றனர். நேரத்தையும், வாழ்க்கையையும், மற்றவற்றையும் சரியானபடி நடத்திச் செல்ல நாகரிகம் இடை விடாது முயன்று வேலை செய்து வருகின்றது. இம்முயற்சியின் உள்நோக்கம்தான் என்ன என்பதை ஆராய்ந்தால், மாந்தனின் பால் தன்மையை ஒழுங்குபடுத்துதல்தான் நாகரிகத்தின் தலையாய முயற்சி என்பது தெட்டெனத் தெளிவாகும். மாக்களிலிருந்து தோன்றிய மாந்தன் இறைவனாக முயல்கின்றான். விலங்குகளின் பால் உணர்ச்சி ஒரு வரம்பிற்குள் உட்பட்டதன்று. இப்பால் உணர்ச்சி முதுகுத் தண்டிலிருந்து வரும் கிளர்ச்சிகளின் ஆளுகைக்கு உட்பட்டது. அவ்விலங்கின் மூளை இக்கிளர்ச்சிகள் செல்லும் வழி

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கை எய்திமை அறிந்து வருந்துகிறேன். தந்தையை இழந்து துயர் எய்தும் தங்களுக்கும் இல்லத்திற்கும் தென்மொழிக் குடும்பத் தினருக்கிய எம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன், —சி. **முத்தையா**, திருச்சி-10.

0:737: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். தந்தையார் அவர்களின் மறைவு குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். அவர் பிரிவால் வருந்தும் தங்களுக்கும் குடும்பத் தாருக்கும் எங்கள் உளம் நெகிழ்ந்த ஆறுதல் மொழிகளை உரியதாக்கு கிறோம். அன்பன், **—வாசுதேவன், அசோக்குமார், இரா. பாலசுப்பிரமணியன்**, வடுகபாளையம், பல்லடம்.

0:738: பேரன்பிற்குரிய ஐயா அவர்கட்கு தி. பி. உயிகயி நளி 'தென்மொழி' இதழ் இன்று வந்தது. பக்கம் 4-இல் இருந்த செய்தி பேரதிர்வைத் தந்தது. தங்கள் துயரத்தில் அம்மாவின் துயரத்தில் நாங்கள் பங்கேற்கிறோம். எங்கள் பரிவை அருள் கூர்ந்து ஏற்க.

—பர். பேரா. **க. ப. அறவாணன்**, பர். பேரா. **தாயம்மாள், அறவாணன்**, செனகல், தென் ஆப்பிரிக்கா.

0:739: கன்னித் தமிழாற் 'கனிச் சாறளித்தபுகழ்த்
தன்னிக ரில்லாத் தனையரே,—மன்னியசீர்த்
தந்தை பிரிவு தணலாய்த் தகித்ததெனே!
சிந்தனை அறிந்திடுமோ சென்று

—க. அ. பிரகாசம், கொடுமுடி-638 151.

0:740: தாங்கள் அருமைத் தந்தையாரை இழந்த செய்தி யறிந்து பெரிதும் வருந்தினேன். அன்னாரின் பிரிவின்போது அச் செய்தி அடியேனுக்குத் தெரியாமற் போனமையால் இறுதி நிகழ்ச்சி யில் பங்கேற்க இயலாது போயிற்று. தங்களுக்கு இதனால் ஏற்பட் டிருக்கும் துயரம், வெறுஞ் சொற்களால் விளக்கிடக் கூடியதன்று. மூத்தோர் பட்டறிந்துரைத்தவாறு, கால ஓட்டத்தூடேதான் மெல்ல ஆற்றிவரத் தக்கதது. தன் மகன், மிகப் பெருஞ்சான்றோன் என்று

(முன்பக்கத் தொடர்ச்சி)

களையே பின் தொடர்கிறது. ஆகவே விலங்கின் மூளைக்கு அவ் விலங்கின் பால் உணர்ச்சியை அடக்கி ஆளும் ஆற்றல் கிடையாது என்பது பெறப்படுகிறது. தொடக்க மாந்தனின் நிலையும் இதுவே தான் ஆனால் மூளை வளர்ச்சி அடைய, அடைய வாழ்க்கையில் குறிக்கோள் உண்டாயிற்று. இயற்கையும், ஒத்துழைத்தது. நாகரிகம் முதிர முதிர, பழைய விலங்கு நிலைமாறி முதுகுத் தண்டு முழுவதும் மூளையின் ஆளுகைக்குள் வந்துவிட்டது. இக்கால மாந்தனின் மூளை அவனுடைய பால் உணர்ச்சியை அடக்கி ஆளும் ஆற்றல் உடையது எனக் கொள்வதில் தவறில்லை (தொடரும்)

உலகேத்துதலைக் கேட்டுக் கண்குளிரப் பார்த்ததன் பின்னரே, இறைவன் அவரைத் தன்பால் அழைத்துக் கொண்டனன். அனைத்தும் அறிந்த தங்களுக்கு மேலும் எதையும் இவன் சொல்வது மிகையாகும். ஆருத் துயரில் அலமந்து கிடக்கும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். காலந் தாழ்த்தி, இது குறித்து உசாவ நேர்ந்தமைக்கு என்னைப் பெரிதும் பொறுத்தருள வேண்டுகிறேன். —பாவலர். **தெசினி**, ஆசிரியர் '**கவிதை**', சென்னை-4.

0:741: செஞ்சொற் பாவல, தங்களைச் சான்றோனாக அவையத்து முந்தியிருக்கச் செய்த தந்தையார் இயற்கையெய்திய செய்தியறிந்தேன்; நனி பெரிதுமிளைத்தேன். தங்களுக்கு என்றன் துன்பந்தோய்ந்த ஆறுதல் மொழிகளன்றி, வேறென்ன கூறவுள? சாதல் இயற்கை; நோதல்விடுத்து நோக்குக உங்கள் முன்னுள்ள ஓவாப் பணியை. தங்களுக்குற்ற துயரில் எளியேனும் பங்கேற்கிறேன்.

—பெரு. **தமிழ்வேந்தன்**, பவானிசாகர்.

0:742: விசும்பது வேய வெண்கதிர் முளையும்
பசுங்கொழு தோகை பயின்ற பருப்பின்
முசுங்கெழு ஓங்க முன்னை கழனி
மசிங்கின காய்ந்த மடிபடு தண்டின்
முதிர முதிர உதிர்ப்பச் சோகை
மருங்கின் வாளா மடத்தமி ழோர்தம்
'உறங்கும் ஆமை' உயிர்த்தெழு மாறு
உணர்த்த உலகு 'உயர்தமி ழறிவா'ல்
புணர்ப்ப ஐய, தம் போற்றருந் தொண்டு
இனித்த கரும்பினு மின்பங்
குளிக்க நறுந்தேன், கூவு-தை தமிழே!

(பொருள் : கரும்பிற் கழிக்க வேண்டுவது காய்ந்த சோகையும் கதிர் வாங்கி வளர, வளர்க்கத் தூண்டுவது பசுந்தோகையு மங்ஙனமாய் தமிழரிடையே உறங்கும் அறியாமைச் சோகைகளைத் தந்தூய் தமி ழறிவால் உதிர்த்தும் உணர்த்தியும் வரும்தம் ஐயா அவர்களின் 'போற்றற்கரிய தொண்டை இவ்வுலக மாந்தர் சுவைக்கப் பெற்றிருப்பது-இனித்த கரும்பினும் நறுந் தேனினும் இன்பம் பயக்க வல்லதென-தமிழணங்கே கூவி அழைக்கின்றாள் போலும்!)

(இவ்வாழ்த்துப் பாவுடன், 'தென்மொழி' வளர்ச்சிக்கெனப் பொங்கல் புத்தாண்டு வாழ்த்தாக உருபா 10-00 விடுத்துள்ளேன். அன்பு கூர்ந்து ஏற்றுக்கொள்ளுமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். வணக்கங்கள் பலப்பல.

—**வளர்மதி சுப்பராயன்**, துவாக்குடிமலை-திருச்சி-14.

நாடி' யிருந்தால் தங்கள் அன்பு தெரிந்திருக்கும். அல்லது நேரில் வந்து சுட்டியிருந்தாலும் அன்பும் ஆதரவும் விளங்கியிருக்கும். எட்ட நின்று இதுபோல் மடல் எழுதுதல் தங்கள் போன்றவர்க்கு எளிது. ஆனால் வினைசெய்தல்...? நன்றி. —**பொறுப்பாசிரியர்.**

0:731: அன்பிற்சிறந்த நண்பரீர்! வாழ்க! வணக்கம். தனித் தமிழார்வத்தில்—அதனை வளர்ப்பதில் என் தந்தையை விஞ்சி விட்டீர்கள். இத்தகு தனித்தமிழ்ப் பெருமகனை ஈன்றுதவிய தங்க ளருமைத் தந்தையைப் போற்றுகின்றேன்; புகழ்கின்றேன். அவர் நல்லுயிர் இறைவன் சேவடியில் ஈறிலின்பம் பெறுக எனக் கூறிக் கொள்கின்றேன்.

—**மறைமலையடிகள் மகனார், வித்துவான். மறை. திருநாவுக்கரசு,** சென்னை-82.

0:732: பேரன்புகெழுமிய ஐயா வணக்கம். திருவள்ளுவர் பெருமகனார் குறித்த தகுதிகள், பண்பு நலன்களெல்லாம் ஒருங்கு கொண்ட அருமைத் தந்தையார் அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறேன். காலஞ்சென்ற அப்பெருமக னாருடன், மதுரை மாநாட்டின்போது பழகியிருந்த நினைவுகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய்த் தொடர வருத்தம் பெருக்கமடை கிறது. 11-11-79 அன்று கனிச்சாறு வெளியீட்டை நேரில் கண்டு களித்த அவர்தம் பெருமிதத் தோற்றம் என் மனத்திரையில் நிழலாடிக் கொண்டிருக்கிறது! அருமைத் தந்தையாரை இழந்து வருந்தும் தங்களின் துயரத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். அப்பெரு மகனாரின் புலம்பன், வானோர்க்கும் உயர்ந்த உலகத்துப் புகுந்து நிறைவுற இறைப்பேரருளை வணங்கி வேண்டி முடிக்கிறேன்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" —(தமிழ்மறை-22).

—**சி. அரசிறைவன்,** தஞ்சாவூர்-1.

0:733: பெருமதிப்பிற்குரிய ஐயாவிற்கு வணக்கம். தென் மொழி (சுவடி கசு ஓலை ந) இதழில் நமக்கு வந்த மடல்கள் பகுதி யில் சூஎசூ எண்ணுள்ள மடலைப் படித்ததும் சிரிப்புத்தான் வந்தது. உடனே தென்மொழி விளம்பரத்தில் வந்த இவ்வடிகள் நினைவுக்கு வந்தன.

'அறமுறை தேர்ந்த அரசியல் கூறும்
நெறிமுறை பிறழ்ந்த அமைச்சியல் சீறும்'

தமிழ் வளங்கெடுக்கும் தருக்கர்க்கு தக்க மறத்தமிழ்க் கோடரி!
தமிழ் நலங்கெடுக்கும் வடவர்முன் பாய்ந்த இடிக்குரல் கோளரி!
"தென்மொழி"

உள்ளதை உள்ளபடி சொன்னால் கூசிடுமோ தமிழனுக்கு. 'ஆசிரிய உரையில் அரசியல் வாடை நாசமாய் அடிக்கிறதாம்' நெஞ்சம் கொதிக்கிறது நமக்கு. புலமையை இதில் தானா புலப் படுத்த வேண்டும் இராசேந்திரனார். தக்கன செய்ய வேண்டுமாம்! என்ன செய்ய வேண்டும்? கலைஞருக்கு வால்பிடிக்க வேண்டுமா அல்லது நடிகருக்கு கால்பிடிக்க வேண்டுமா என்பது தெரியவில்லை. ஐயா தங்களின் ஆசிரிய உரை தமிழினத்திற்குப் பயன் கொடுக்குமா என்பது ஐயப்பாடே. என்று விழித்தெழுமோ இத்தமிழினம்? அன்பன்,

—**இரா. தமிழ்க்கதிர்,** திருக்கழுக்குன்றம்.செங்கை (மா. வ.)

0:734: அன்புள்ள ஐயா அவர்களுக்கு, வணக்கம்! ஐயா, தங்கள் தந்தையார் அவர்களின் மறைவுச் செய்தியைத் தென்மொழியிற் கண்ணுற்றுப் பெரிதும் துயருற்றோம். அவர்களை மதுரை மாநாட்டு நிகழ்ச்சிகளிற் கண்டு, தனியாக நின்று பேசியுமிருக்கிறேன். சில உருவுடை மாந்தரை நம்மை யறியாமல் நாம் நேசிக்கிறோம், கண்ணிற் பட்டவுடனே. அவ்வகையில் தங்கள் தந்தையார் அவர்கள் ஏதோ பலநாட் பழகிய ஓர் உருவினர் போன்று என்னுள் ஒரு பாச உணர்ச்சியை ஏற்படுத்தியவர். மிக நெருக்கமாய் ஓர் உறவினருடன் பேசும் விருப்புடன் பேசினேன். அவர்களை மறக்க இயலவில்லை. அவர்கள் மறைவால் ஏற்பட்ட துயரில் நாங்களும் பங்கு பெறுகிறோம். தங்கள் அன்புள்ள, —**கி. பாலு,** மின்பாறை.

0:735: வணங்கற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு மதுரை அன்பர்கள் வரையும் மடல்: ஐயா! தாங்கள் அறியாததில்லை யெனினும், ஒன்றினை ஈண்டு வலியுறுத்த விழைகின்றோம். மொழி, நாடு, இனம் காத்திட, இனி, அன்பர்கள் தமிழ்மணி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் குறிப்பிட்டாற்போன்று (சுவடி 16, ஓலை 4), ஒரேயொரு வழிதான் உண்டு. ஆம், தாங்கள் தனிப்பெரும் இயக்கமொன்றினைத் தொடங்கும் முயற்சியினை உடனடியாக மேற்கொள்ளல் வேண்டும்.

முதற்படியாக, தமிழகம் முழுவதும் **'தென்மொழி'** உறுப்பினர்களைக் கொண்டு, **'தனித்தமிழ்க் கழகம்'** என்றாற் போன்ற பெயரில் கழகங்கள் தோற்றுவிக்கப்படல் வேண்டும். ஏற்கெனவே உள்ள கழகங்களையும் ஒருங்கிணைத்துத் தக்க பொறுப்பாளர்கள் அமர்த்தப்படல் வேண்டும். உறுப்பினர் சேர்க்கும் பணி தீவிரமாக்கப்படல் வேண்டும். பள்ளி, கல்லூரி மாணவர், ஆசிரியர் நடுவினில் 'தென்மொழி'க் கருத்துகளைப் பரப்புதல் முகாமையானது. இவற்றிற்கான ஆணையினை—அறைகூவலினை—விரைவினில் தாங்கள் பிறப்பிக்க வேண்டும். அன்பர் தமிழ்மணி உரைத்தது போன்று, இறுதி நிலையில் நாங்கள் தரத்தக்கது, எங்கள் உயிரே! இத்துணையும், உங்களினும் பல்லாண்டு அகவையிற் குறைந்த நாங்கள் உரைப்பது தமிழ்நலம் கருதியே என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஐயா அவர்களது 'கனிச்சாறு' வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நிகழ்வுற்றமை கண்டு கழிபேருவகையுற்றோம். வரவியலாது போயினமை குறித்து வருத்தமுமடைந்தோம். 'கனிச்சாறு', 'பர். அரசர் அண்ணாமலைச் செட்டியார் பரிசுத் திட்ட'த்திற்கு விடுத்து வைக்கப்படல் வேண்டுமென விழைகின்றோம். இதுகாறும், கருத்தாற் கண்டு வந்த நும்மைக் கண்ணுற் காணும் பேறு, தாங்கள் 'உலகத் தமிழ் மாநாட்டிற்கு இங்கு வருகை தரும் பொழுது கிட்டுமென நம்புகின்றோம். அடிவணங்கி விடை பெறுகின்றோம். இங்ஙனம், அன்பர்கள், —**தமிழச்சிறுவன் கா. சுந்தரன், பொன். அன்பழகன், செ. அமுதன்.**

0:736: பேரன்பு கெழுமிய ஐயா, நெஞ்சு கனிந்த வணக்கம். தென்மொழி இதழ் கண்டேன். நம் அருமைத் தந்தையார் அவர்கள்

(தொடர்ச்சி 39-ஆம் பக்கம்)